Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விமானம் மற்றும் கப்பல் மூலம்
உள்நாட்டு வெளிநாட்டிற்கான சிறியதோ,பெரியதோ,
எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை
எந்த நாட்டிற்கும் எந்தநேரமும்
குறைந்த கட்டணத்தில் அனுப்பிட
மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு 20% விசேட சலுகை
லண்டனுக்கான 5 Kg பொதிக்கு 1 Kg க்கான கட்டணம் 500/=
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310
36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253
குகன் தொலைத்தொடர்பகம் 166,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 22 2027 Fax - 021 226 2993

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி - 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 றஜபு 03 (09.08.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:313



# அரசின் நிழல் யுத்தத்தை நிறுத்த சர்வதேசம் வலியுறுத்தவேண்டும்!

## விதார் ஹெல்கிசனிடம் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

லண்டன் —

தமிழர் தாயகத்தில் - குறிப்பாக கிழக்குப் பகுதியில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக அரச படைகளும் தமிழ் கூலிப்படைகளும் கூட்டாகச் சேர்ந்து நடத்திவரும் நிழல் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச நாடுகள் காத்திரமான அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், நோர்வே வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரிகளான மக்னீ ருட் மற்றும் சொல்பரி (12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லைக் கந்தனின் மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்!


யாழ்ப்பாணம் —

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து கொடியேற்ற நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 26 ஆம் திகதி மாலை

(12 ஆம் பக்கம் பார்க்க)



## மேர்வின் சில்வாவுக்கு எதிராக கொழும்பில் மாபெரும் பேரணி!

கொழும்பு —

இந்திய வம்சாவழித் தமிழரை பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தரக் குறைவகப் பேசியமையைக் கண்டித்தும், பிரதியமைச்சர் பதவியிலிருந்து அரசு அவரை விலக்க வேண்டும் எனக் கோரியும் நேற்று கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக சிறுபான்மைக் கட்சிகள் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.


இரு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு நீதிமன்றத்தின் முன்னால் வைத்து பிரதியமைச்சர் மேர்வின் சில்வா இந்திய வம்சாவழித் தமிழரை தரக் குறைவாகப் பேசியிருந்தார்.

இதனால் ஆத்திரமடைந்த சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தமிழ் மக்களை அவதூறாகப் பேசியமையைக் கண்டித்தும், அவரை அரசாங்கம் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்றும் -

தமது கோரிக்கையை அரசு உதாசீனம் செய்ததால் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவது என்றும், தீர்மானித்திருந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)



## மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவி கன்ரர் மோதிப் பலி!



யாழ்ப்பாணம் —

கொக்குவில் - பொற்பதி வீதியில் - முதலாம் ஒழுங்கையில் நேற்றுக்காலை கன்ரர் வாகனம் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் - மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் - கொக்குவில், பொற்பதியைச் சேர்ந்த வாமதேவன் கீர்த்தனா (வயது 17) என்ற மாணவியே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுக்காலை மேற்படி மாணவி மோட்டார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோரின் வாள்வீச்சில் ராணுவத்தினர் மூன்று பேர் காயம்!

யாழ்ப்பாணம் —

மிருசுவிலில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த படையினரை இனந்தெரியாத நபர்கள் வாளால் வெட்டியதில் - மூன்று படையினர் காயமடைந் தனர்.

காவலரணுக்கு உணவு விநியோகித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த படையினரே நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் மித்தெனியவைச் சேர்ந்த புஷ்பகுமார (வயது 19) என்ற சிப்பாய் படுகாயமடைந்தார்.

இவர் பலாலி இராணுவ வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின்னர் ஆபத்தான நிலையில் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

வாள்வெட்டால் இவரது மண்டையோடு சிதைந்து மூளைவரை பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் மேலும் இரு படையினர் காயமடைந்தனர் என்றும் காயமுற்ற படைச் சிப்பாய்களில் ஒருவரான உபாலி அபயவர்த்தன இறந்துவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவத்தை அடுத்து படையினர் அந்தப் பகுதியில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததுடன் - தேடுதல்களிலும் ஈடுபட்டனர்.

## 'நமது ஈழநாடு' புதுக்குடியிருப்பில் நடத்திய புலமைப் பரிசில் கருத்தரங்கில் 1000 மாணவர்கள் பங்கேற்பு!



கிளிநொச்சி —

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி -குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நேற்று நமது ஈழநாடு நடத்திய புலமைப் பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி பயன் பெற்றனர்.

ஐந்தாமாண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் திறனை உயர்த்தும் நோக்குடன் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்றுக்காலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாந்தரூபனுக்கு அஞ்சலிசெலுத்த வட-கிழக்கில் துக்கம் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம் —

இணுவிலில் இராணுவத்தினரின் கண்மூடித்தனமான தாக்குதலில் உயிரிழந்த ஜெயசீலன் சாந்த ரூபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், மேற்படி சம்பவத்தைக் கண்டித்தும் நேற்று வட-கிழக்கின் பல்வேறு பகுதிகளில் துர்க்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

திருகோணமலையில் தமிழ் மக்கள் பேரவையும், ஐக்கிய மருத்துவசிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் ஒன்றியமும் இணைந்து துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்திருந்ததையடுத்து,

திருகோணமலையின் பல்வேறு பகுதிகளில் கறுப்பு கொடிகள் கட்டப்பட்டும், பொது இடங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் சோககீதமும் இசைக்கப்



பட்டது.

நகரின் பிரதான சந்திகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் கறுப்பு கொடிகள் கட்டப்படிருந்ததுடன், வர்த்தக நிலையங்கள் சிலவும் மூடப்பட்டிருந்தன.

வீதிகளில் மக்கள் நடமாட்டம் வழமையைவிட குறைவாகவே காணப்பட்டிருந்தது. பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ் சிறு செய்திகள்

## மஹோற்சவம்

புங்குடுதீவு—

புங்குடுதீவு கதிர்காமம் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10தினங்கள் நடைபெறவுள்ளது.

17ஆம்திகதி புதன்கிழமை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## ஆங்கில தினப்போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்—

கடந்த ஐந்தாம், ஆறாம் திகதிகளில் யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருந்த தெல்லிப்பளைக் கல்விக் கோட்ட ஆங்கிலதினப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளுக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

5 ஆம் திகதி நிகழ்வுகள் யாவும் 12 ஆம் திகதியும், 6 ஆம் திகதி நிகழ்வுகள் யாவும் 13 ஆம் திகதியும் நடைபெறுமென தெல்லிப்பளைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் அறிவித்துள்ளார்.

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

கொக்குவில்—

யாழ். புனித மரியாள் (ஓ.எல்.ஆர்.) வித்தியாலய பழைய மாணவர்களின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ம.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் பாடசாலையின் வளத் தேவைகள் மற்றும் கல்வி அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும், பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும்.

(206)

## மாதாந்த ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்—

மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று காலை 9மணிக்கு யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திட்ட இணைப்பாளர் தெரிவித்தார்.

# விளையாட்டுப் போட்டியும் 33 ஆவதுஆண்டு விழாவும்

யாழ்ப்பாணம்—

உரும்பிராய் அண்ணா சனசமூக நிலையத்தின் 33ஆவது ஆண்டு விழாவும், 18 ஆவது விளையாட்டுப் போட்டியும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஆகி யோரும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் கலந்து கொள்வர்.

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தின் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் சுதாகரன், ஓய்வுபெற்ற ஆசிரியை சுசிலா சாரங்கபாணி, கிராம சேவை உத்தியோகத்தர் சூரியகுமார், ஓய்வு பெற்ற அதிபர் பஞ்சலிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

# இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம்—

தமிழீழ விளையாட்டுத்துறையும், தமிழீழ மாணவர் அமைப்பும் இணைந்து யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தினூடாக நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில்தே.சி.சி.சி. அணியை எதிர்த்து உடுவில் விளையாட்டுக் கழகமும், ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

இந்த இறுதிச் சுற்றுப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.


மனோகரா யாழ்ப்பாணம்
இரண்டாவது வெற்றிவாரம்
இலங்கையிலும் இந்தியாவிலும்ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

ரத்னா யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில நாட்கள்
அக்சன் கிங்
அர்ஜுன்,
சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
மக்கள் திலகம் எம்.ஜி. ஆர் மற்றும் லதா, நாகேஸ் நடித்த
உரிமைக் குரல்
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 5.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு!காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு!
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)


# யாழ்ப்பாண மாநகரசபை

## நல்லூர் உற்சவம் 2005 - வீதித்தடை பற்றிய அறிவித்தல்

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கீழ்க்குறிப்பிடப்படும் வீதிகள் 10.08.2005 ஆம் திகதி தொடக்கம் 04.09.2005 ஆம் திகதி வரை வாகனப் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருக்கும்.

**01. மூடப்பட்டிருக்கும் வீதிகள்**

☆ அரசடிச் சந்திக்கும், 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்;

☆ பிராமணக்கட்டுக் குளம் சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்;

☆ செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்.

**02. பாதை மாற்றம்**

☆ பேரூந்துகள், சிற்றூர்திகள் மற்றும் சுமைகூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, செம்மணி வீதி மற்றும் முத்திரைச்சந்தையூடாகச் செல்லல்;

☆ பருத்தித்துறை வீதிக்கும், நாவலர் வீதிக்கும் இடைப்பட்ட நல்லூர் குறுக்கு வீதியால் பேரூந்துகளும், சிற்றூர்திகளும் செல்லுவது முற்றாகத் தடை செய்யப்படும்.

**03. வாகனத் தரிப்பிடங்கள்**

☆ முத்திரைச்சந்தைப் பகுதியில் சங்கிலியன் சிலைக்கு எதிர்ப்பக்கமாக பருத்தித்துறை வீதியில்;

☆ கந்தர்மடம் சந்திக்கு அப்பால் அரசடி வீதியில் ;

☆ அம்மன் வீதி, பருத்தித்துறை வீதி சந்திக்கு அப்பால் பருத்தித்துறை வீதியில்;

☆ செம்மணி வீதியில் பூங்காவிற்கு அப்பால்.

*(கலாநிதி க.குணராசா)*
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

[C/4358]

# யாழ்ப்பாண மாநகரசபை

## சுப்பிரமணியம் பூங்காவை அலங்கரிக்கும் சிலைகளுக்கான கேள்வி கோரல்

**யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவை அலங்கரிப்பதற்கான பின்வரும் சிலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன:**

01. தமிழ் அன்னை - முழு மானிட அளவில், பீடத்தில் இருக்கும்பொழுது குறைந்தது 6' பெண் ஒருத்தி அமர்ந்திருப்பதுபோல் இருத்தல் வேண்டும்.
02. யாழ்.நங்கை - முழு மானிட அளவில், பீடத்தில் இருக்கும்பொழுது குறைந்தது 6' பெண் ஒருத்தி அமர்ந்திருப்பதுபோல் இருத்தல் வேண்டும்.
03. யானை - முழு அளவில், அருகில் ஒரு கன்றுடன் கூடியதாக.
04. இடையில் நீர்க்குடத்தைத் தாங்கிய பெண் - முழு மானிட அளவில். குறைந்தது 6' அளவில்.
05. குடத்தினைத் தோளில் வைத்து நீர் ஊற்றும் பெண் - முழு மானிட அளவில். குறைந்தது 6' அளவில்.
06. புற்றரையில் படுத்திருக்கும் இரண்டு புலிகள் - முழு அளவில்.
07. 20 கொக்குகள் - பல்வேறு நிலைகளில் அவற்றின் சரியான அளவுடன்.
08. டைனோசர் - முழு அளவில்.

நிபந்தனைகள் :-

01. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே அவற்றுக்கான மாதிரி வரைபடத்துடன் கூறுவிலை தரப்படல் வேண்டும்.
02. கூறுவிலை கிடைக்கும் பட்சத்தில் அவற்றை கூறுவிலை பெற்ற திகதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் சுப்பிரமணியம் பூங்காவில் ஒப்படைக்கவேண்டும்.
03 சிலைகள் யாவும் தரமான சீமெந்தினாலும், கம்பிகளாலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
04. சிலைகளை உரிய இடத்தில் பொருத்திய பின் அதற்கான வர்ணங்கள் தீட்டி வழங்க வேண்டும்.
05. இவற்றுக்கான கூறுவிலை விண்ணப்பப் படிவங்களை 25.08.2005 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன் மாநகரசபை கேள்விப் பெட்டியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அன்று பி.ப 3.00 மணிக்கு அக்கேள்விகள் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்படும். அவ்வேளை கேள்வி சமர்ப்பித்தவர்களும் சமூகமளிக்கலாம்.
06. விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300/- (வற் வரி நீங்கலாக) மாநகரசபையில் செலுத்திப் பெற்றுக்கொள்ளவும்.
07. சமர்ப்பிக்கப்படும் மாதிரிப் படத்திற்கும், செய்யப்பட்ட சிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படும் பட்சத்தில், அதனை நிராகரிக்கும் உரிமை மாநகரசபைக்கு உண்டு.

*(கலாநிதி க.குணராசா)*
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

[C/4357]

# பணிநிலை வேண்டுகை

கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்கள் தன்வரலாறடங்கிய (சுயவிபரம்) வேண்டுகைகளை 2005.08.13 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும்.

## பணிநிலை:

01. ஆய அலுவலர் (ஆண்கள்)
02. ஆய உதவியாளர்(ஆண்கள்)

## கல்வித்தகைமை:

பணிநிலை 01. க.பொ.த.(உ/த) பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

பணிநிலை 02. க.பொ.த.(சா/த)பரீட்சையில் குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

## வேண்டுகை அனுப்ப வேண்டிய முகவரி:

மேலாளர்,
ஆளணிப் பிரிவு,
நடுவப்பணியகம்,
ஆயம்.

## நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:

2005.08.16
காலை 10.00 மணிக்கு

## நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:

நடுவப்பணியகம்,
ஆயம்,
கிளிநொச்சி.

குறிப்பு:- நேர்முகத் தேர்வுக்குக்கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத் தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

மேலாளர், ஆளணிப்பிரிவு , ஆயம்.

# ஜனாதிபதி தேர்தலில் யார் போட்டியிட்டாலும் தமிழ் இனத்துக்கு விமோசனம் இல்லை!

## அரியநேந்திரன் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு



ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிட்டாலும் சரி, யார் வெற்றியீட்டினாலும் சரி தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கப் போவதில்லை.

எம்மைப் பொறுத்தவரை இராமன் ஆண்டாலும் சரி, இராவணன் ஆண்டாலும் சரி தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை தமிழர்களின் பலத்தினால் மட்டுமே சாத்தியமாகும் என, மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்தார்.

சின்னவத்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்-

கடந்த ஐம்பத்தி இரண்டு வருடங்களாக ஆட்சிபீடம் ஏறிய தலைவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியதும், தமிழ் மக்கள் மீது அடாவடித் தனங்களைக் கட்டவிழ்த்து, தமிழ் மக்களின் உரிமையை அடக்கிய வரலாறுதான் இன்றும் தொடர்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மட்டும் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவது, வாக்குறுதிகள் வழங்குவது, தமிழ் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியான கட்சித் தலைவர்கள் என்ன செய்தார்கள்? என்பது தமிழ் மக்களுக்கு நன்கு விளங்கும்.

ஜனாதிபதித் தேர்தலாலோ, இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்பாலோ எமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை. எமது பலத்தின் மூலமே எமது இலக்கை அடையமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்த் தேசியத்துக்கு எதிராக புதிய தொலைக்காட்சி சேவை

வோர்ஸோ

தமிழ்த் தேசியத்துக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்வதற்காக இனவாத சிங்கள சக்திகள் போலந்து நாட்டில் இருந்து 'சிங்களே' என்ற தொலைக்காட்சி ஒளிபரப்பை நடத்தவுள்ளன.

போலந்து தலைநகர் வோர்ஸோவில் உள்ள கட்டடம் ஒன்றில் அமைக்கப் பட்டுள்ள இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

தினமும் இந்தத் தொலைக்காட்சி 2 மணிநேரம் ஒளிபரப்பை மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் அடங்கிய பொதி மீட்பு

கொழும்பு

கண்டி ரயில் பாதையைச் சுற்றி துப்புரவுப் பணியை மேற்கொண்டிருந்த ரயில்வே ஊழியர்கள் ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள பற்றைக்காட்டுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகள் அடங்கிய பொதியொன்றை மீட்டனர்.

கடந்த ஆறாம் திகதி முற்பகல் 11 மணியளவில் ரயில்வே பாதுகாப்பு ஊழியர்களின் கண்காணிப்பின் கீழ் சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி, சுற்றாடல் பிரதேசத்தை துப்புரவு செய்துகொண்டிருந்த வேளையே இந்தத் துப்பாக்கி ரவைப் பொதி கண்டெடுக்கப்பட்டது.

இந்தப் பொதியிலிருந்து ரி-56 ரக துப்பாக்கிக்குரிய 15 ரவைகள் இருந்ததாகவும், இவை மேலதிக விசாரணைகளுக்காக கண்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கடந்த 5 ஆம் திகதி அந்தப் பகுதியில் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இந்த நிலையில் அவர் மீதான தாக்குதலுக்காக இந்த ரவைகள் கொண்டுவரப்பட்டதா? என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (தே)

# மேர்வின் சில்வாவின் மகனுக்கெதிராக அடுத்தவாரம் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

கொழும்பு

சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தமை, பொலிஸ் அதிகாரிகளை அச்சுறுத்தி அவர்களின் கடமைகளைச் சுதந்திரமாக செய்யவிடாது தடுத்தமை ஆகிய குற்றங்கள் தொடர்பாக பிரதிய மைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவுக்கு எதிராக அடுத்த வாரம் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள இந்த வழக்கு சட்ட மா அதிபரால் அரச சட்டத்தரணி பாலிந்த ரணசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

மாலகசில்வாவுக்கு எதிரான குற்றப் பத்திரிகை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

குற்றவியல் சட்டத்தின் 323 ஆம் பிரிவுக்கமைய மாலக சில்வாவுக்கு எதிராகக் கடும் குற்றச்சாட்டுகள் இருப்பதாகவும், அந்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், அதிகபட்சமாக மூன்று வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப் படலாம்.

கோட்டை நீதிவான் சரத் சி.கருணாரத்னவிடம் தேடுதல் மற்றும் கைது செய்வதற்காகப் பெறப்பட்ட அனுமதியுடன் கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டலொன்றுக்குச் சென்ற பொலிஸார் அங்கு போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டோரைக் கைதுசெய்ய முற்பட்டபோது, மாலக சில்வா உட்பட நால்வர் அதிகாரிகளை அச்சுறுத்தி அவர்களின் கடமைகளில் குறுக்கிட்டனர்.

பின்னர் கொழும்பு - கோட்டை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த மாலக சில்வா உட்பட நால்வரும் பொலிஸ் பிணையில் விடுதலையாகினர்.

மாலக சில்வா உட்பட்ட சந்தேக நபர்கள் பிஸ்டலொன்றைக் கையில் வைத்துக் கொண்டு தம்மை அச்சுறுத்தி கடமையைச் செய்ய விடாது தடுத்ததாகச் சில அதிகாரிகளின் வாக்குமூலங்களும் சம்பவத்தை நேரில் கண்ட சில சாட்சிகளும் உள்ளன.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கைது செய்யச் சென்ற வேளை அவர்களின் கடமையை செய்யவிடாது தடுத்த சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாது பிணையில் விடுதலை செய்தமையால் நீதிமன்றம் அவமதிக்கப்பட்டுள்ளதா என ஆராய்ந்து அவ்வாறு நீதிமன்றம் அவமதிக்கப்பட்டிருந்தால் கோட்டை பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தயாராகி வருவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## பொலிஸாரின் துப்பாக்கிகள் அபகரிப்பு!

கொழும்பு

மிளகாய்த்தூளை முகத்தில் வீசி இரு பொலிஸ் கொன்ஸ்டபிள்களின் துப்பாக்கிகள் அபகரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் ஜா எல பிரதேசத்தில் இடம்பெற்றது. கடந்த சனிக்கிழமை இரவு வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை - முச்சக்கர வண்டியில் வந்த ஐவர் கொண்ட குழு, இரண்டு கொன்ஸ்டபிள்களின் கண்களில் மிளகாய்த்தூளை வீசி, பின்னர் முதுகில் கத்தியால் குத்தி விட்டுத் துப்பாக்கிகளை எடுத்துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தப்பியோடிய படையினர் விலகும் திகதி மேலும் நீடிப்பு

கொழும்பு

இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் தம்மை சட்டப்படி விலக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்கனவே பல தடவைகள் வழங்கப்பட்ட நிலையில் மற்றொரு வாய்ப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்காக இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல தடவைகள் படைத்தலைமயால் இது போன்ற வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதும், படையினரில் மிகக் குறைந்த எண்ணிக்கையானோரே தம்மை படைகளிலிருந்து சட்டப்படி விடுவித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பொதுக்கட்டமைப்பு விவாதத்துக்கு அரசாங்கம் ஆட்சேபனை தெரிவிப்பு!

கொழும்பு

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப் பட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் குறித்து, நாடாளுமன்றத்தில் மீண்டும் விவாதம் நடத்துவதற்கு அரசாங்கம் ஆட்சேபனையும், எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

நீதிமன்ற விசாரணையில் இருக்கும் விவகாரம் குறித்து சபையில் விவாதிப்பது பிழையான முன்னுதாரணம் என்றும் கூறப்பட்டது.

ஜே.வி.பியினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய, பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விவாதத்தை இன்றும், நாளையும் நடத்துவதற்கு கடந்த மாதம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார அனுமதி வழங்கியிருந்தார்.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான வழக்கு விசாரணை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதால், ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றத்தில் இப்போது விவாதிக்கப்படக்கூடாதென்று அரசாங்கம் ஆட்சேபனை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமைச்சரும், ஆளும் கட்சியின் பிரதம கொரடாவுமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, சபாநாயகரின் இந்த முடிவு தவறான முன்னுதாரணத்தை வழங்கப்போவதாகத் தெரிவித்தார்.

இதுகுறித்த தனது எதிர்ப்பை அரசு, சபாநாயகருக்குத் தெரியப்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், அதனையும் மீறி விவாதம் நடத்தப்படுமானால் எதிர்காலத்திலும் இவ்வாறான விடயங்களுக்கு அவர் அனுமதி வழங்கியாக வேண்டுமென்று சபாநாயகரிடம் தாம் சுட்டிக் காட்டியிருப்பதாகவும் கூறினார்.

அரசின் இந்த ஆட்சேபனையின் காரணமாக இந்த விவாதத்தை நடத்த அனுமதியளிப்பதா? இல்லையா? என்பது பற்றி சபாநாயகர் சட்ட ஆலோசனையைப் பெற்றிருக்கிறார் எனவும் தெரியவருகிறது.

# அத்தியட்சகர் படுகொலை; உன்னிப்பாக அவதானிப்பு!

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொழும்பு

இணுவில் பகுதியில் பொலிஸ் அத்தியட்சகர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் முடிவுறும் வரை இந்தச் சம்பவம் யுத்த நிறுத்த மீறலா என்பது குறித்து தெரிவிக்க முடியாது என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இணுவில் பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலைமையை அடுத்து, யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கடத்தப்பட்டு பின்னர் கொல்லப்பட்டிருந்தார்.

கொல்லப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அவரின் இறுதிக் கிரியைகள் குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உரிமை கோரி போராடும் தமிழரை கொன்றொழிக்கும் நிலை வரக்கூடாது

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்



கொழும்பு

உரிமை கோரி போராட்டம் நடத்த முயற்சித்த தமிழ்மக்களைக் கொன்றொழிக்கும் நிலை மீண்டும் வரக்கூடாது. அந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டுக்கொண்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்படவுள்ள ஊவா - வெல்லஸ்ஸ கழகத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஆட்சியாளர்களின் கருத்துகளுக்கு எதிர்மாறான கருத்துகள் கொண்டவர்களை இரவோடிரவாக அழித்தொழிக்கும் நிலையும் அன்று இருந்தது. சந்திகளில் மக்களின் சடலங்களே காணப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாவட்ட மட்ட தட கள விழாவில் 8 புதிய சாதனைகள் படைப்பு



யாழ்ப்பாணம் ——

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் இடம்பெற்ற 2005ஆம் ஆண்டுக்கான தடகள விளையாட்டு விழாவில் புதிய எட்டு சாதனைகள் நிலைநாட்டப்பட்டன. இதில் பெண்கள் பிரிவில் ஆறு சாதனைகளும், ஆண்கள் பிரிவில் இரு சாதனைகளும் நிலைநாட்டப்பட்டன.

பெண்கள் பிரிவில் - பரிதி வட்டம் வீசுதல் நிகழ்வில் 1981ஆம் ஆண்டு சாதனையான 27 மீற்றரை - நெடுந்தீவு பிரதேச செயலக வீராங்கனை ந.கருணகலாதேவி 27.1 மீற்றர் வீசி புதிய சாதனை படைத்தார்.

100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 1990 ஆம் ஆண்டு சாதனையான 13.5 வினாடியினை சங்கானை பிரதேச செயலக வீராங்கனை என்.ஸ்ரீவித்தியா 13.4 வினாடிகளில் ஓடியும், முப்பாய்ச்சல் நிகழ்வில் 2001ஆம் சாதனையான 10.23 மீற்றரினை யாழ்.பிரதேச செயலக வீராங்கனை ரி.வாசுகி 10.24 மீற்றர் பாய்ந்தும் சாதனை படைத்தனர்.

குண்டுபோடுதல் நிகழ்வில் 2003 ஆம் ஆண்டு சாதனையான 8.57 மீற்றரினை யாழ்.பிரதேச செயலக வீராங்கனை கே.தர்சினி 9.34 மீற்றர் எறிந்தும், 5000 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 2003ஆம் ஆண்டு சாதனையான 21:28:8 வினாடியினை சாவகச்சேரி பிரதேச செயலக வீராங்கனை ஈ.அனுசியா 20:57:1 வினாடிகளில் ஓடியும்-

200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் 1989 ஆம் ஆண்டு சாதனையான 28.5 வினாடிகளை - சங்கானை பிரதேச செயலக வீராங்கனை என்.சிறிவித்தியா 28.3 வினாடிகளில் ஓடியும் புதிய சாதனைகள் படைத்தனர்.

ஆண்கள் பிரிவில் குண்டுபோடுதல் நிகழ்வில் தனது கடந்த வருட சாதனையான 13.34 மீற்றரை சாவகச்சேரி பிரதேச செயலக வீரர் எம்.பிரதீப்குமார் 13.67 மீற்றர் எறிந்தும், உயரம் பாய்தல் நிகழ்வில் 2003ஆம் ஆண்டு சாதனையான 1.91 மீற்றரை தெல்லிப்பளை பிரதேச செயலக வீரர் எஸ்.கமலமோகன் 1.94 மீற்றர் பாய்ந்தும் புதிய சாதனைகள் படைத்தனர்.

இதேவேளை, 2005ஆம் ஆண்டுக்கான தடகள விளையாட்டுக்களின் மாவட்ட மட்ட சிறந்த தடகள வீரராக தெல்லிப்பளை பிரதேச செயலக வீரர் எஸ்.கமலமோகன் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (113)



கலிபோர்னியா, இர்வினே நகரில் நடந்த சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் பிரிவில் அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ் தங்கம் வென்றார்.

## கலைச்சுடர் சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் ——


கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் 27ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டுப் போட்டிகள் கிராம மட்டத்தில் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் இடம்பெற்ற விளையாட்டுக்களின் பெறுபேறுகள் வருமாறு :-

கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் உதயசூரியன் அணி அதனை எதிர்த்து ஆடிய இளங்கதிர் அணியை இரு நேர் செற்றுக்களில் 15:3, 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனானது.

மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இளங்கதிர் அணி, உதயசூரியன் அணியை 3 ஓட்டங்களால் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

உதைபந்தாட்டப் போட்டியில் இளங்கதிர் அணி, உதயசூரியன் அணியை 2:1 என்ற கோல்க்கணக்கில் வென்று சம்பியனானது.



பின்லாந்து, ஹெல்சின்கி மைதானத்தில் உலக தடகள போட்டியில் பெண்களுக்கான ஹெப்டத்லான் பிரிவில் பிரான்ஸ் வீராங்கனை யுனிசே பார்பர் உயரம் தாண்டுதலில் முதலிடம் பெற்றார்.

## விளையாட்டு

# யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தட கள விளையாட்டுப் போட்டி முடிவுகளின் விபரம்

யாழ்ப்பாணம் ——

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தட-கள போட்டிகள் கடந்த 6ஆம், 7ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளின் விபரம் வருமாறு -

**100 மீற்றர் ஓட்டம் ---------**

ஆண்கள் -
1.எம்.சஞ்சீவ் (யாழ்ப்பாணம்)
2.எஸ்.சஞ்சித் (நல்லூர்)
3.ஏ.ஏ.ரஜீம்ராஜ் (சண்டிலிப்பாய்)

பெண்கள் -
1.என்.ஸ்ரீவித்யா (சங்கானை)
2.ஏ.றிசாலினி (சண்டிலிப்பாய்)
3.என்.மயூரி (கரவெட்டி)

**200 மீற்றர் ஓட்டம் --------**

ஆண்கள் -
1.எம்.சஞ்சீவ் (யாழ்ப்பாணம்)
2.பி.தினேஸ்குமார் (பருத்தித்துறை)
3.கெ.உமாகாந் (நல்லூர்)

பெண்கள் -
1.என்.ஸ்ரீவித்யா (சங்கானை)
2.என்.மயூரி (கரவெட்டி)
3.வி.மயூரி (சாவகச்சேரி)

**400 மீற்றர் ஓட்டம் --------**

ஆண்கள் -
1.ஏ.ஏ.ரஜீம்ராஜ் (சண்டிலிப்பாய்)
2.ஏ.முகுந்தன் (சாவகச்சேரி)
3.கெ.உமாகாந் (நல்லூர்)

பெண்கள் -
1.என்.ஸ்ரீவித்யா (சங்கானை)
2.வி.மயூரி (சாவகச்சேரி)
3.ஆர்.பிரமாலட்சுமி (நெடுந்தீவு)

**800 மீற்றர் ஓட்டம் --------**

ஆண்கள் -
1.ஏ.முகுந்தன் (சாவகச்சேரி)
2.ஜெ.ஜெயதாஸ் (யாழ்ப்பாணம்)
3.எஸ்.பிரதீஸ் (சங்கானை)

பெண்கள் -
1.இ.அனுசியா (சாவகச்சேரி)
2.எஸ்.அனுஷா (சண்டிலிப்பாய்)
3.பி.யசோதினி (சாவகச்சேரி)

**5000 மீற்றர் ஓட்டம் -------**

ஆண்கள் -
1.என். காந்தரூபன் (சண்டிலிப்பாய்)
2.அன்ரனி ஸ்ரீபன் (தெல்லிப்பளை)
3.ஏ.ஜெயரூபன் (சாவகச்சேரி)

பெண்கள் -
1.இ.அனுஷியா (சாவகச்சேரி)
2.எஸ்.அனுஷா (சண்டிலிப்பாய்)
3.என்.சுமதி (சண்டிலிப்பாய்)

**10000 மீற்றர் ஓட்டம் -------**

ஆண்கள் -
1.ஏ.ஜெயரூபன் (சாவகச்சேரி)
2.எஸ்.வவி (உடுவில்)
3.ரி.கவிராஜ் (யாழ்ப்பாணம்)

பெண்கள் -
1.எஸ்.பவிலாதினி (கோப்பாய்)
2.ரி.றொபினா (நல்லூர்)

**110 மீற்றர் தடைதாண்டல் ------**

ஆண்கள் -
1.எம்.சஞ்சீவ் (யாழ்ப்பாணம்)
2.ஆர்.விமலசந்திரன் (சண்டிலிப்பாய்)
3.எஸ்.திருமாவளவன் (சண்டிலிப்பாய்)

**100 மீற்றர் தடைதாண்டல் -----**

பெண்கள் -
1.எஸ்.தயாளினி (பருத்தித்துறை)
2.எஸ்.கிருஷாந்தினி (சண்டிலிப்பாய்)
3.ஏ.றிசாசினி (சண்டிலிப்பாய்)

**1500 மீற்றர் ஓட்டம் --------**

ஆண்கள் -
1.என்.காந்தரூபன் (சண்டிலிப்பாய்)
2.ஜெ.ஜெயதாஸ் (யாழ்ப்பாணம்)
3.ஏ.ஜெயரூபன் (சாவகச்சேரி)

பெண்கள் -
1.இ.அனுசியா (சாவகச்சேரி)
2.எஸ்.ஜெயபவானி (சங்கானை)
3.எஸ்.அனுஷா (சண்டிலிப்பாய்)

**400 மீற்றர் தடைதாண்டல் ----**

ஆண்கள் -
1.ரி.கஜந்தன் (உடுவில்)
2.ஆர்.சி.அபிஷேகன் (யாழ்ப்பாணம்)
3.ஏ.துரன் (யாழ்ப்பாணம்)

பெண்கள் -
1.எஸ்.தயாளினி (பருத்தித்துறை)
2.ரி.வாசுகி (யாழ்ப்பாணம்)
3.ஆர்.பிரமாலட்சுமி (நெடுந்தீவு)

**ஈட்டி எறிதல் -----------**

ஆண்கள் -
1.ஆர்.இராஜகாந்தன் (தெல்லிப்பளை)
2.வி.சசிகரன் (சாவகச்சேரி)
3.பி.ஆர்.மனோகரன் (கரவெட்டி)

பெண்கள் -
1.கெ.சேதுப்பிரியா (தெல்லிப்பளை)
2.என்.கருணகலாதேவி (நெடுந்தீவு)
3.ஏ.நித்தியா (சண்டிலிப்பாய்)

**முப்பாய்ச்சல் ------------**

ஆண்கள் -
1.எஸ்.சஞ்சித் (நல்லூர்)
2.எஸ்.திருமாவளவன் (தெல்லிப்பளை)
3.பி.டனுசியன் (பருத்தித்துறை)

பெண்கள் -
1.ரி.வாசுகி (யாழ்ப்பாணம்)
2.இ.றொசானி (சண்டிலிப்பாய்)
3.வி.கஜீதா (யாழ்ப்பாணம்)

**குண்டு போடுதல் ----------**

ஆண்கள் -
1.எம்.பிரதீப்குமார் (சாவகச்சேரி)
2.ஆர்.உதயகுமார் (கரவெட்டி)
3.ஜெ.அன்பழகன் (யாழ்ப்பாணம்)

பெண்கள் -
1.கே.தர்சினி (யாழ்ப்பாணம்)
2.என்.கருணகலாதேவி (நெடுந்தீவு)
3.கெ.கீர்த்தனா (தெல்லிப்பளை)

**பரிதிவட்டம் வீசுதல் --------**

ஆண்கள் -
1.ஆர்.உதயகுமார் (கரவெட்டி)
2.ஜெ.அன்பழகன் (யாழ்ப்பாணம்)
3.கெ.சதீஸ் (பருத்தித்துறை)

பெண்கள் -
1.என்.கருணகலாதேவி (நெடுந்தீவு)
2.கெ.தர்சினி (யாழ்ப்பாணம்)
3.கெ.சேதுப்பிரியா (தெல்லிப்பளை)

**உயரம் பாய்தல் ----------**

ஆண்கள் -
1.எஸ்.கமலமோகன் (தெல்லிப்பளை)
2.கெ.சபேஸ்கண்ணா (உடுவில்)
3.எஸ்.சத்தியமூர்த்தி (சங்கானை)

பெண்கள் -
1.வி.கஜீதா (யாழ்ப்பாணம்)
2.ஏ.றிசாசினி (சண்டிலிப்பாய்)
3.எஸ்.சுகாசினி (உடுவில்)

**நீளம் பாய்தல் -----------**

ஆண்கள் -
1.ஏ.சிறீனிவாஸ் (யாழ்ப்பாணம்)
2.ரி.பகீரதன் (சங்கானை)
3.எஸ்.சஞ்சித் (நல்லூர்)

பெண்கள் -
1.ரி.வாசுகி (யாழ்ப்பாணம்)
2.இ.றொசானி (சண்டிலிப்பாய்)
3.எஸ்.சுபாஜினி (உடுவில்)

**4X100 மீற்றர் அஞ்சல் -----**

ஆண்கள் -
1.யாழ்ப்பாணம்
2.பருத்தித்துறை
3.சண்டிலிப்பாய்

பெண்கள் -
1.சண்டிலிப்பாய்
2.சாவகச்சேரி
3.யாழ்ப்பாணம்

**4X400 மீற்றர் அஞ்சல் -----**

ஆண்கள் -
1.சண்டிலிப்பாய்
2.யாழ்ப்பாணம்
3.பருத்தித்துறை

பெண்கள் -
1. யாழ்ப்பாணம்
2.தெல்லிப்பளை
3.சாவகச்சேரி.

(113)




ஹெல்சின்கி உலக தடகளப் போட்டிகளில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பிரிவில் அமெரிக்க வீரர் ஜஸ்டின் கட்லின் (நடுவில்) முதலிடம் பெற்றார். அருகில் பிரிட்டன் வீரர் மார்க் லீவிஸ் (வலது), ஜப்பான் வீரர் அசஹறரா.

# படையினர் விடும் தவறுகளுக்காக தமிழ் உயிர்கள் இழக்கப்படுவதா?

## அனுமதிக்கமுடியாதென்கிறார் இளம்பரிதி

யாழ்ப்பாணம் —

**எமது மண்ணில் நிலைகொண்டுள்ள ஒவ்வொரு இராணுவத்தினரும் தவறு செய்யும்போது - அதற்குப் பலியாவது தமிழ் உயிராகத்தான் இருக்கிறது. இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.**

இணுவிலில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஜெயசீலன் சாந்தரூபனின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் நடைபெற்றபோது அங்கு இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

உலகநாடுகளில் மக்கள் செறிந்து வாழ்கின்ற இடங்களில் தளங்களோ அன்றி இராணுவத்தினரின் நடமாட்டங்களோ இருப்பது இல்லை. இது சர்வதேசத்தில் பின்பற்றப்படுகின்ற ஒரு நடைமுறை.

திடீரென ஏற்படுகின்ற விபத்துக்களில் அல்லது வெடி விபத்துக்களில் அந்தப் பகுதி மக்கள் கொல்லப்பட்டுவிடலாம் என்பதனால் அதைத் தவிர்ப்பதற்காகவே சர்வதேச நடைமுறை இவ்வாறு பின்பற்றப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் 34 வீதமான நிலப்பரப்பில் இராணுவத்தினர் நிலைகொண்டிருக்கின்றனர். குறிப்பாக மக்கள் நடமாட்டங்கள் மிக்க இடங்களிலேயே பாரிய தளங்களும், அவர்களுடைய நடமாட்டங்களும் அதிகரித்திருக்கின்றன. உண்மையில் இது சர்வதேச நடைமுறைக்கு முற்றிலும் முரணானது.

போர்நிறுத்த உடன்படிக்கையின்படி இரண்டு தரப்பும் அதாவது அரச தரப்பும், தமிழர்களுடைய தரப்பும் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 30 நாளில் இருந்து 180 நாட்களுக்குள் இராணுவத்தினர் மக்கள் வாழ்கின்ற இடங்களிலிருந்து விலக வேண்டும் என்ற ஒரு உடன்பாடு இருக்கிறது. ஆனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த விடயத்தில் அரசு இதை மறுதலித்துத்தான் நிற்கிறது.

யுத்த காலத்திலும் இராணுவத்தினரால் எமது மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு மக்களும் மரண பீதிக்குள் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார்கள். போர்நிறுத்த உடன்படிக்கையின் பின் இயல்புநிலை ஏற்படுமென எமது தலைவரும் விரும்பினார். அதனால்தான் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். எமது மக்களின் எதிர்பார்ப்புக்கு அமையவே எமது தலைவர் அதனை மேற்கொண்டார்.

ஆனால், யுத்த காலத்தில் போல் அதற்கு எந்தவிதத்திற்கான மாற்றீடும் இல்லாமல் சமாதானத்திற்கான இந்தக் காலத்திலும் எங்களுடைய மக்கள் தொடர்ச்சியாக இராணுவ அச்சுறுத்தல்களினால், இராணுவ நடவடிக்கைகளால், இராணுவ வாகனங்களால், இராணுவத்தினர் கொண்டுதிரிகின்ற துப்பாக்கிகளால் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

அதனடிப்படையில் இந்தச் சாவு எங்களுக்கொரு அதிர்ச்சியையே தந்திருக்கிறது. இந்த இளைஞனை சடலமாகப் பார்ப்போம் என்று நாங்கள் எண்ணவில்லை. யாருமே நினைக்கவுமில்லை. யாரும் கனவும் காணவில்லை.

சுடும் நிலையில் அவர்கள் துப்பாக்கியைக் கொண்டு திரிவது அவர்களுடைய பாதுகாப்புக்காக எனக் கருதுகிறார்கள். அப்படியானால் இந்த மண்ணிலே காலம் காலமாக, பரம்பரை பரம்பரையாக, பூர்வீகமாக வாழ்ந்த மக்களது பாதுகாப்புப் பற்றி, உயிர் இழப்புப் பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவில்லை.

இதிலிருந்து ஒன்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். எங்களுடைய மக்களை அவர்கள் இலங்கைத் தீவின் பிரஜைகளாகக் கருதவில்லை. தங்களுடைய



அரசின் பிரஜைகளாகவும் கருதவில்லை. இங்கிருக்கின்ற இராணுவத்தினரையே இந்த நாட்டுப் பிரஜைகளாகக் கருதுகின்றனர். தமிழர்களை, எங்கள் எல்லோரையும் வேறு ஒரு குடியுரிமைக்கான மக்களாகவே கருதுகிறார்கள் என்பது தெரிகிறது.

இந்தச் சம்பவம் மிகவும் கொடுமையானது, கொடூரமானது, கண்டிக்கத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார்.

(82)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்தேற்றல்

மானிப்பாய் —

நல்லூர் பிரதேசசபையின் கீழ் உள்ள திருநெல்வேலி, கல்வியங்காடு பகுதிகளில் இன்று வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

எனவே, இந்தப் பகுதியில் உள்ளவர்கள் தமது வளர்ப்பு நாய்களைக் குறிப்பிட்ட நிலையங்களுக்கு கொண்டுவருமாறு, நல்லூர் பிரதேசசபையின் பொது சுகாதார பரிசோதகர் வி.தயாமோகன் அறிவித்துள்ளார்.

## சக்கர நாற்காலி அன்பளிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பாவனைக்கென சுவாமியார் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற பரிசாரகர் வேலுப்பிள்ளை விஜயரத்தினம் சக்கர நாற்காலி ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் 27 ஆம் விடுதியில் பரிசாரகராக பணியாற்றி, ஓய்வு பெற்றதன் ஞாபகமாகவே இந்தச் சக்கர நாற்காலி அந்த விடுதியின் நோயாளர் பாவனைக்கென அன்பளிப்பாக கடந்த வாரம் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

(113)

## கிணறுகளில் நீர் வற்றியதால் குடிநீர் விநியோகத்தில் சிரமம்!

வடமராட்சி கிழக்கு —

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதில் பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகிறது.

முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு இயக்கச்சி, பளைப் பகுதியில் உள்ள கிணறுகளில் இருந்து பவுசர்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டுவந்தது.

கடும் வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் வெகுவாகக் குறைந்துள்ளது. இரு கிணறுகளிலிருந்து நீரை வழங்க உரிமையாளர்கள் மறுத்துள்ளமையால், குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில நாட்களுக்குமுன் விநியோகிக்கப்பட்ட நீரில் புல் பூண்டுகள் இருப்பதாகப் பொதுமக்களால் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற மாதாந்த கூட்டத்தில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு முறையீடு செய்யப்பட்டது.

இதையடுத்து பொதுமக்களுக்கு நல்ல குடிநீரை வழங்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸ் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் ஆகியோரைக் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(21)

## பாலர் பாடசாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

ஆழியவளை —

பருத்தித்துறை - சின்னப்பிள்ளையார் கோவிலடி சிறி சண்டிகா பரமேஸ்வரி பாலர் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம், நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் அதிபர் குணசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்தப் பாடசாலைக்கான அடிக்கல்லை, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட திட்ட அமுலாக்கல் செயலகத் திட்டக் கண்காணிப்பாளர் வ.கிருஸ்ணகுமார் நாட்டினார்.

யாழ். மாவட்ட திட்ட அமுலாக்கல் செயலகத்தால் ரூம் ரு றீட் நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பாடசாலை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக - வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலனும், கிராம அலுவலர் நந்தகுமாரும் கலந்துகொண்டனர்.

(122)

## படையினரின் ரோந்து நடவடிக்கை யாழ்ப்பாண குடாநாட்டில் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ். நகரப்பகுதியின் முக்கிய வீதிகளில் கடந்த சனியன்று மோட்டார் சைக்கிள் படையணியினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

சனிக்கிழமை காலை முதல் நகரின் பிரதான வீதிகளூடாக படையினர் மோட்டார் சைக்கிள்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால் வீதிகளில் பொதுமக்கள் அச்சத்துடன் பயணம் செய்தனர்.

குடாநாட்டில் யுத்த காலத்தில் காணப்பட்ட ரோந்து நடவடிக்கை போல, படையினரின் ரோந்து நடவடிக்கை அமைந்ததால் பொதுமக்கள் பெரும் அச்சத்துக்குள்ளாகினர்.

அத்துடன், முக்கிய வீதிகளூடாகப் பெரும் எண்ணிக்கையான படையினர் கால்நடையாகவும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். முக்கிய சந்திகள் மற்றும் இடங்களில் படையினர் ஆயுதங்களுடன் நின்றிருந்தனர்.

இதேவேளை, யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் நேற்று முன்தினம் திறந்துவிடப்பட்டிருந்தன. எனினும் அங்கு சிவில் பணிகள் எதுவும் நடைபெறவில்லை.

கொல்லப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பொலிஸ் நிலையத்திலும், அதனை அண்டிய வீதிகளிலும் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

## மந்திகை ஆதார வைத்தியசாலை மேலதிக வைத்திய சேவைகள்!

யாழ்ப்பாணம் —

மந்திகை ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைகள், கண் வைத்தியம், புற்றுநோய்க்கான சிகிச்சை போன்ற மேலதிக வைத்திய சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதில் கண் வைத்திய சேவைக்காக கண் வைத்திய நிபுணர் குகதாஸ் ஒவ்வொரு புதன்கிழமையும் வருகைதரவுள்ளதுடன், புற்று நோய்க்கான சிகிச்சையை வழங்குவதற்காக சத்திரகிசிச்சை நிபுணர் என்.ரவிராஜ் ஒவ்வொரு மாதத்திலும் முதல் வரும் புதன்கிழமைகளில் சிகிச்சை வழங்கவுள்ளார். இவர் எதிர் வரும் 13 ஆம் திகதி முதல் தனது சிகிச்சையை ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட மூன்று நோய்களுக்குமான கிசிச்சைகள் கடந்த பல வருடங்களாக இல்லாமையால், அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது.

## கால்நடை வைத்தியசாலையில் கோழி வளர்ப்பு பயிற்சி நெறி!

யாழ்ப்பாணம் —


மந்திகை கால்நடை வைத்தியசாலையால் எதிர்வரும் 19 ஆம் திகதி கோழி வளர்ப்பு சம்பந்தமான பயிற்சிநெறியொன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியை கால்நடை வைத்தியர் சி.வசீகரன் வழங்கவுள்ளார்.

இந்தப் பயிற்சியில் இதுவரை காலமும் பயிற்சிபெற்றவர்களும், புதிதாகப் பயிற்சிபெற விரும்புபவர்களும் கலந்துகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மூவிமெண்டோ நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட 2 மாதத்துக்கு மேற்பட்ட கோழிகளுக்கான தடுப்பூசிகள் இலவசமாக ஏற்றப்படவுள்ளதால், கோழிகளைக் கொள்வனவு செய்தவர்கள் மந்திகை கால்நடை வைத்தியசாலை அலுவலகத்தில் தொடர்புகொள்ளுமாறு வைத்தியர் சி.வசீகரன் கேட்டுள்ளார்.

(12)



கோண்டாவில் மத்திய கல்வி மேம்பாட்டுப் பேரவைக்கென புதிதாக கணினிப் பயிற்சிக் கூடத்தை ஆரம்பிப்பதற்கு டென்மார்க் நாட்டில் வசிக்கும் கந்தவனம் இந்திரன் என்பவர் மத்திய சனசமூக நிலையத் தலைவர் சி.ஆனந்தராசாவிடம் கணினி ஒன்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(82)




## அறுவை உபகரணங்களை பாதுகாக்க புதிய முறை


**ம**னிதரிடையே தொற்றுநோயை ஏற்படுத்தாது, அறுவைச் சிகிச்சை மருந்து உபகரணங்களைப் பாதுகாக்கும் புதியமுறை ஒன்றை மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர்.

இத்தகைய உபகர ணங்களில் காணப்ப டும் ஒருவகைப் புரதம் - எந்தவிதமான தொற்றுநீக்கி முறையாலும் அகற்றப் பட முடியாததாகக் காணப்பட்டது. புதிய முறையில் இவை முன்னரை விட இலகுவாக அகற்றப்படுகிறது. இது குறித்த விபரங்கள் எடின்பரோ பல்கலைக் கழகத்தின்மருத்துவ சஞ்சிகையில் (Virology Journal) வெளியிடப்பட்டுள்ளது.




## சூரிய குடும்பத்தில் 10 ஆவது கிரகம்

**எ**மது சூரிய மண்டலத்தின் 10 ஆவது கிரகத் தைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். 1846ஆம் ஆண்டில் நெப்ரியூன் - எமது சூரிய மண்டலத்தில் கடைசியாகக் கண்டுபிடிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பெரிய கிரகமாக இது உள்ளது. 2003 ஆம் ஆண்டில் இந்தப் புதிய கிரகம் கண்டுபிடிக்கப்பட்டபோதும், அதன் முழு விபரங்க ளும் தற்போதுதான் வெளியிடப்பட்டுள்ளது. சுமார் 3 ஆயிரம் கிலோமீற்றர் குறுக்குத் தூரம் கொண்ட இந்தக் கிரகம் - பனியையும், பாறைகளையும் கொண்டது எனவும், புளூட்டோவை விடப் பெரியது எனவும், புளூட்டோவை விட மூன்று மடங்கு தூரத்தில் UB 313 என்று குறிப் பிடப்பட்டுள்ள இந்தக் கிரகம் உள்ளது எனவும் கூறப்படுகிறது.



## மலிவான கணினிகள்


**கா**ர்கள், மோட்டார் சைக்கிள்கள் எனச் சொந்தமாகத் தயாரித்து, உலகைப் பிரமிக்க வைத்துக்கொண்டிருக்கும் இந்தியா - தற்போது மலிவான விலையில் கணினிகளை உற்பத்திசெய்து, வெளியிட்டிருக்கிறது. சென்னையில் வைத்து மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் தயாநிதிமாறன் இதை வெளியிட்டிருக்கிறார். ஏறக்குறைய இந்திய ரூபாவுக்கு - 9,990 இற்கு கணினி மிகமிக மலிவாகக் கிடைத்ததையிட்டு, தகவல் தொழில்நுட்ப முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்திருக்கின்றனர்.



இதனுடைய உள்ளடக் கத்தை ஆராய்ந்து பார்த்தால், புறொசெஸ்ஸர் 1ஜிகா கேட்ஸ் ஆகவும், மெமறி128மெகாடைட்ஸ்ரம் மற்றும் கார்ட்டிஸ்க் 40 ஜிகாடைட்ஸ் ஆகவும் உள்ளது. மொனிட்டர் 15 அங்குலம் - கலர் ஆகவும் காணப்படுகிறது. இதனை எச்.சி.எல் இன்போசிஸ்டம்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.

## புற்று கலங்களை தடுக்க மற்றுமோர் கலம்

**நு**ரையீரல் புற்றுநோயை ஏற்படுத்தும் புற்றுநோய்க் கலங்களுக்கான இரத்த விநியோகத்தைத் துண்டித்து, அந் தக் கலங்கள் பல்கிப் பெருகுவதைத் தடுக்க முடியும் என மசாசூசெட்ஸ் தொழில் நுட்ப நிறுவனம் கூறுகிறது.



Nano Cells எனப்படும் கலங்களைப் புற்றுநோய்க் கலங்களினுள் செலுத்தினால் அவை புற்றுநோய்க் கலங்களினுள் பெருகி, அவற்றுக்கான இரத்த விநியோகத்தைத் தடுக்கும் என ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதன்மூலம் புற்றுநோய்க் கலங்களுக்கு நஞ்சூட்டியும் அழிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் இந்த முயற்சியில் சிக்கல்கள் இருந்தபோதிலும், அது தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## சிடிகளுக்கெதிராக கேஸ்

**ச**ட்ட விரோதமான முறையில் இறுத் தட்டுக்களை வெளியிடுகின்ற பல நிறுவனங்கள் தற்போது பிரித் தானியாவில் பிடிபட்டிருக்கின்றன. இதன் காரணமாகப் பல திருட்டு சிடிக்களை வெளியிடமுடியாத நிலையில் முன்னணி மியூசிக் நிறுவனங்கள் இருப்பதாக, ஐரோப்பாவிலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.




ஏறத்தாழ 8906 பாடல்களை இன்ரநெற்றிலிருந்து கிடைக்கமுடியாதவாறு நீதிமன்றம் தடைசெய்திருக் கிறது. இதேவேளை 14 ஆயிரம் பேருக்கு மேல், 12 நாடுகளிலிருந்து இத்தகைய செயற்பாட்டுக்காக நீதிமன்றம் மூலம் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருப் பதாகவும் கூறப்படுகிறது.

இது ஒரு நல்ல முயற்சியாக இருந்தாலும், காலப்போக்கில் பல சிக்கல்களைக் கொடுக்கும் எனவும் கூறப்படுகிறது.

## ரிமோட் விமானம்

**ஆ**ளில்லா விமானம் தற்போது உலகின் பெரும்பாலான நாடுகளால் உளவுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா தனது உளவுத் தேவைக்காக ஆப்கானிஸ்தானில் மட்டும் 800 ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது. ஒரே மாதிரியான விமானங்களாக இவை இல்லாவிட்டாலும் கூட, இவற்றினுடைய தோற்றம் மற்றும் கணினி வசதிகள் ஆகியன எல்லோரையும் பிரமிக்க வைக்கக் கூடியதாக இருக்கிறது. சில ஆளில்லா விமானங்கள் 24 மணி நேரம் வரை பயணம் செய்யக் கூடியவை. ஆனால், ஒரு சில அரை மணி நேரம் மட்டும் பயணம் செய்யக் கூடியவையாக இருக்கிறன. நவீன தொழில் நுட்பங்களின் செல்வாக்குக் காரணமாக - புதிய புதிய உத்திகள் எல்லாம் பாவிக்கப்பட்டு, தற்போது 60 மணிநேரம் வரை வானில் பறக்கக்கூடிய விமானங்கள் உள்ளதாகவும் கூறப்படுகிறது.




## இப்படியும் ஒரு வீடு

**70** மில்லியன் பவுண்ட்ஸ் தொகையைத் தாண்டுகிறதாம் சந்தை விலை. 58 ஏக்கர் நிலப்பரப்பில், 103 அறைகளுடன் (30 படுக்கை அறைகள் உட்பட) கட்டப்பட்டுள்ள இதை வீடு என்று சொல்லி விட முடியாது.

பிரமாண்டமான ஆடம்பர மாளிகை என்றால் பொருத்தமாக இருக்கும். உலகிலேயே விலையுயர்ந்தது இது தான் என்கிறார்கள். இது எங்கே இருக்கின்றது என்று அறிய ஆவலாக இருக்கின்றதா? லண்டன் North Surrey. இதுதான் அந்த மாளிகை இருக்கும் இடம்.

மாளிகையோடு ஒட்டி விமான இறங்கு தளம் ஒன்றும், 5 நீச்சல்குளங்களும் இருக்கின்றன. உலக பணக்காரர்களை வரிசைப்படுத்தும் Forbes நிறுவனமே இந்தத் தகவலைத்தந்துள்ளது. இப்பொழுது இது விற்பனைக்குள்ளதாகவும் அறிவித்துள்ளது.



2000ஆம் ஆண்டில் இந்த மாளிகை எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த மாளிகையின் அயலவர்களாக பிரபல்ய பாடகரான எல்டன் ஜோனும், வின்சர் கோட் டையின் ராணியாரும் வாழ்ந்து வருகிறார்களாம். இரண்டாவது இடத்தில் நிற்கும் அமெரிக்கப் பங்களாவொன்றை விட, இது பெறுமானத்தில் 28 மில்லியன் பவுண்ட்ஸ் தொகை அதிகமாம்.

# சுகாதார ஸ்தாபனம்


தேசிய சுகாதார சேவை (என்.எச். எஸ்) கடந்த 10 வரு டங்களாகச் செய்து வருகின்ற சேவைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, உண்மையில் சுகாதாரத்துறைக்கு மிகவும் சிறந்த சேவையாற்றியிருக்கின்றது என்றேகூற வேண்டும். இந்த ஸ்தாப னத்தில் ஏறக்குறைய 130,000 வைத்தியர்கள் வரையில் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். இந்த ஸ்தாபனத்தினுடைய குறை என்ன வென்றால், தாதிகள் பற்றாக்குறை. உலகளாவிய ரீதியில் தாதிகளின் எண்ணிக்கை வைத்தியர்களுடன் ஒப்பிடப்படும் போது, மிகவும் குறைவாக உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், 2008 ஆம் ஆண்டளவில் என்.எச்.எஸ் உடைய சேவைகள் மிகவும் விரிவுபடுத்தப்படும் எனவும், அத்துடன் பலதரப்பட்ட சத்திரசிகிச்சைகள், மருந்து கண்டு பிடிப்புகள் ஆகியவற்றையும் இது மேற்கொள்ளும் எனவும் கருதப்படுகிறது.



# புதிய மருந்து

பறவைக் காய்ச் சலுக்குரிய பலதரப்பட்ட மருந்துகள் மிக வும் வேகமாகக் கண்டு பிடிக்கப்பட்டு வருகின்ற இந்த நேரத்தில், ஐரோப்பிய நாடுகளும் இப் போது இந்த மருந்துகளைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது.

உண்மையில் இத்தகைய மருந்துகள் டி.எஸ். ஏயினை மையமாகக் கொண்டே தயாரிக்கப்பட வேண்டும். அண்மை யில் தென்கிழக்கு ஆசியாவில் மட்டும் 50 பேர் வரையில் இந்த நோயால் மருந்துகள் இன்றி இறந்திருக்கிறார்கள்.





எச் 5 என் 1 என்ற மருந்து ஒன்று இந்த நோய்க்காகக் கண்டு பிடிக் கப்பட்டது. ஆனால், இந்த மருந்து நோயைக் கட்டுப் படுத்தவில்லை என வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

தற்போது ஐரோப்பாவில் மட்டும் 50 ஆயிரம் பேர் வரையில் இத்த கைய பறவைக்காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# கட்டாயக் கணினிப்பயிற்சி

கணினி என்பது உலகின் மூளையாகி விட்ட இந்த நேரத்தில், ஸ்கொட்லாந்தில் வயது வந்தவர்கள் எல்லோருக்கும் கணினிப்பயிற்சி கட்டாயமாக் கப்பட்டிருக்கிறது. வருடத்துக்கு 200 ஸ்ரேலிங் பவுண்களைச் செலுத்தினால் சிறப்பான கணினிப் பயிற்சியைப் பெறக் கூடியதாக அரசாங்கம் ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கிறது.

18 வயதுக்கு மேற்பட் டவர்கள் யாவரும் கணினிப்பயிற்சியை ஊக்கமாக மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது. ஸ்கொட்லாந்தின் தகவல் தொழில்நுட் பத்தரத்தை உயர்த்துவதே இத்தகைய முயற்சியின் நோக்கம் எனக் கருதப்படுகிறது. தன்னிச்சையாக இந்த மக்கள் கணினிகளைப் பாவிக்கவும், அத னைப் பயன்படுத்தவும், அறிந்து கொள்ள வேண்டும் எனவும் ஸ்கொட்லாந்து அரசாங்கம் கூறுகிறது.




# வேட்டையாடு விளையாடு


45 டொலர்கள் அதாவது 2000 இந்திய ரூபா சம்பாதிக்க ஒரு வழி வேண்டுமா? தெருக்களில் கட்டாக்காலிகளாகத் திரியும் பசுக்களைப் பிடித்து நீங்கள் அரச அதிகாரிகளிடம் ஒப்படைத்தால், 2000 ரூபா கிடைக்கும், இதை புதுடெல்கி உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.



புனிதமான மிருகமாகக் கணிக்கப்படும் பசு, தலைநகரின் தெருக்களில் தன்னிச்சையாகத் திரிவது அதிகரித்து இருப்பதை அடுத்தே இந்தச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது. பிடித்துக் கொண்டு வரப்படும் பசுக்களை நீதிமன்றம் ஏலவிற்பனை மூலம் விற்க முடிவு செய்துள்ளது.

ஏறத்தாழ 40,000 வரையிலான பசுக்கள், புதுடெல்கித் தெருக்களில் அலைந்து திரிகின்றன என்று இங்குள்ள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியப்பயணத்திற்கு எத்தனை பேர் தயாராகி விட்டீர்கள்?

# இனிப்புத் தெரியாத சிங்கம், புலி






விலங்குகள் உலகில் பெரிய பூனைகள் என அழைக்கப்படும் சிங்கம், புலி, சிறுத்தை இனங்கள் இனிப்பான உணவை நாடாமைக்குக் காரணம் அவற்றின் பரம்பரை அலகிலுள்ள இனிப்பு - எதிர்ப்பு சுவை ஜீனே என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சுவை உணர்வை ஏற்படுத்தும் ஜீன் செயற்பாட்டினாலேயே இந்த விலங்குகள் இனிப்பு உணவு வகைகளை கவனியாது, மாமிச உணவுகளை நாடு கின்றன. கூர்ப்பின் போது இவை மாமிச பட்சினிகளாக மாறியமைக்கும் இந்த அலகே காரணம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்த விலங்குகளால் இனிப்புச் சுவையை உணர்ந்து கொள்ள முடியாது, இனிப்பு என்று அவற் றால் உணர முடியாது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# உறை நிலை நீர் செவ்வாயில் படம் பிடிப்பு

செவ்வாய்க் கிர கத்தின் பாரிய பள் ளத்தாக்கு ஒன்றில் நீர் உறைந்து, தேங்கி நிற்பது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. மார்ஸ் எக்ஸ்பிரஸ் செயற் கைக்கோள் இதைப் படம்பிடித்து அனுப் பியுள்ளது.



இதன்மூலம் செவ் வாயில் உயிரினம் இருந்ததற்கான/இருப்பதற்கான ஆதாரம் கிடைத்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். 35 கிலோமீற்றர் நீளமான இந்தப் பள்ளத்தாக்கினுள், இரண்டு கிலோமீற்றர் ஆழத்தில் உறை நிலையில் நீர் காணப்படுகிறது. செவ்வாய்க் கிரகத்தின் முனைப் பகுதிகளில் ஏற்கனவே உறை நிலை நீர்நிலைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# நாயொன்றின் நகல்

16 வாரங்கள் கழிந்த நிலையில், தமது நகல் உற்பத்தியொன்று இன்னமும் உயிரோடு ஆரோக்கியமாக இருப்பதையிட்டு, தென்கொரிய விஞ்ஞானிகள் குதூகலிக்கிறார்கள். **Snuppy** என்று இந்த நாய்க்குப் பெயரிடப்பட்டுள்ளது. இதனுடன் இருந்த இன்னொரு குட்டி இறந்து விட்டது.

இதுவரையில் **Dolly** என்ற செம்மறியாடும், **CC** என்ற பூனையும், **Ralph** என்ற எலியும், குளோனிங் முறை மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்த வரிசையில் இப்பொழுது இந்த நாயும் சேர்ந் துள்ளது.

மனிதர்களுக்கு வரும் நோய்களே நாய்களுக்கும் வருவதால், இந்தக் குளோனிங் முறை, அதனை ஒத்த மனி தனைச் சிருஷ்டிக்கப் பெரிதும் உதவப் போகிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஏனைய மிருகங்களோடு ஒப்பிடும்போது நாய்களைக் குளோனிங் முறையில் உருவாக்குவது மிகச் சிரமம் என்றும் சொல் லப்படுகிறது.



கொரியாவில் மருத்துவ விஞ்ஞானிகள் 123 நாய்களில் ஆயிரம் தடவைகள் முட்டைகளைச் செலுத்தியதில் மூன்று தடவைகள் மாத்திரமே சிலவற்றைக் கர்ப்பமாக்க முடிந்துள்ளது. இது சியோல் பல்கலைக் கழக நாய்க்குட்டி என்பதால் **Seoul National University Puppy** முதல் எழுத்துக்களை இணைத்து **Snuppy** என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

# நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன

## முல்லைத்தீவு அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிப்பு



முல்லைத்தீவு ——

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அதே வேளை சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்பு பணிகளுக்கு பின் நிற்பது கவலைக்குரிய விடயம் என - முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தற்போதைய புனரமைப்பு பணி தொடர்பாக நமது ஈழநாடு செய்தியாளருக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 2 ஆயிரத்து 124 தற்காலிக வீடுகள் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்களுக்கான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இவர்களை நிரந்தரமாக தங்க வைப்பதற்கான இடங்கள் எம்மால் ஒதுக்கப்பட்டுள்ளன.

அரச காணிகளில் 4 இடங்களும், தனியார் காணிகளில் 14 இடங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 4 அரச காணிகளின் அனுமதி பெறுவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும், 14 தனியார் காணிகளில் மக்களை குடியமர்த்துவதற்கான காணி சுவீகார நடவடிக்கைக்கான உரிய ஆவணங்களையும் அனுப்பி வைத்துள்ளோம்.

இந்தக் காணிகளிலேயே பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இந்த மாவட்டத்தில் 5 ஆயிரத்து 500 வீடுகள் சேதமடைந்துள்ளன. இவற்றில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், போரூட் போன்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆயிரத்து 100 வீடுகள் கட்டித் தருவதற்கு முன் வந்துள்ளன. எல்லாமாக 9 இற்கு மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறு உதவுவதற்கு முன்வந்துள்ளன.

இந்த மாவட்டத்தில் 14 பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 3 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளன. இந்த மூன்று பாடசாலைகளுக்கும் காணி வழங்கி கட்டடங்களை அமைக்க வேண்டியுள்ளது.

பாதிக்கப்பட்ட 14 பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு யுனிசெப், ஜேர்மன் அரசாங்கம், ஒக்ஸ்பாம் போன்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதுவரைக்கும் 11 நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்துள்ளன.

இதில் 11 பாடசாலைகளை மீளவும் சொந்த இடத்திலேயே புனரமைக்க வேண்டும். இதுவரையில் ஒரு பாடசாலைக்கான கட்டட வேலை மட்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்புப் பணிகளைத் தொடங்குவதில் தாமதம் காட்டி வருகின்றன. மழைகாலத்தில் பாடசாலை மாணவர்கள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகளில் கல்வியைத் தொடரமுடியாத நிலை இருக்கின்றது. இதனால் விரைவாக இந்தப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும்.

கடற்தொழிலில் ஈடுபடுவோருக்கு இது வரையில் 300 படகுகள்வரை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தாலும், கரித்தாஸ் நிறுவனத்தாலும் வழங்கப்பட்டுள்ளன. சுமார் ஆயிரத்து 500 குடும்பங்கள் வரையில் நட்டஈடு கோரி விண்ணப்பித்துள்ளனர். இவர்களின் விண்ணப்பங்கள் மீன்பிடித்துறை அமைச்சுக்கு சிபாரிசு செய்யப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்கள் வாழ்வை மீளத் தொடங்குவதற்கு உதவிகள் கிடைப்பது மிகக் குறைவாகத்தான் இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## கேட்போர் கூடம் திறப்புவிழா

புதுக்குடியிருப்பு ——

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கேட்போர் கூடம் - நாளை காலை 10 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தக் கேட்போர் கூடம் சுமார் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கும் புதுக்குடியிருப்பு பழைய மாணவர்களால் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(03)

## கியூடெக் - ஹரித்தாஸ் நிறுவனத்தால் 400 துவிச்சக்கரவண்டிகள் வழங்கல்!

முல்லைத்தீவு ——

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு கியூடெக் - ஹரித்தாஸ் நிறுவனம் துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது. கடற்தொழிலாளர்களின் தொழிலை மேம்படுத்தும் நோக்கில் - அளம்பில் பகுதியில் 400 துவிச்சக்கர வண்டிகளை வழங்கியுள்ளது.

இந்த நிகழ்வு அருட்திரு யூட் அமலதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இரண்டாம் கட்டமாகத் துவிச்சக்கர வண்டிகளோடு, மீன் பெட்டிகளையும் மிகவிரைவில் வழங்கவுள்ளதாக கியூடெக் - ஹரித்தாஸ் நிறுவன இயக்குனர் சி.கே. ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

இதேவேனை இந்த நிறுவனத்தால் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி கதிரை, மேசைகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(91)

## கிளிநொச்சி வைத்தியசாலைக்கு புதிதாக இரு மருத்துவர்கள்!

கிளிநொச்சி ——

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமைபுரிவதற்கென, இரண்டு வைத்திய அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை முதல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமைபுரிந்துவந்த வைத்திய கலாநிதி வி. சண்முகராசா, கொழும்பு வடக்கு றாகம வைத்தியசாலையில் கடமை புரிந்துவந்த வைத்திய கலாநிதி எஸ்.திலீபன் ஆகிய இருவருமே கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமைபுரிவதற்கென இடமாற்றம் பெற்று வந்துள்ளனர்.

வைத்தியத்துறையில் பட்டம் பெற்றதும், சகல வசதிகளும் அடங்கிய வைத்தியசாலைகளைத் தேடி வைத்தியர்கள் செல்லும் பொழுது, வசதிகள் நிறைந்த வைத்தியசாலைகளிலிருந்து தங்களது சுயவிருப்பில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கடமைபுரிய இந்த இரு வைத்தியர்களும் முன்வந்துள்ளமையை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி உட்பட அனைவரும் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

## கிராம முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு

வட்டக்கச்சி ——

வ்ட்டக்கச்சி கிராம முன்னேற்றச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சோதி விநாயகர் ஆலய முன்றலில் ஆ.சிறிரங்கநாதன் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராக ஆ.சிறிரங்கநாதன், உபதலைவராக பொ. பத்மநாதன், செயலாளராக சி.சுந்தரம்பிள்ளை, உபசெயலாளர் பொ.பத்மகாந்தன், பொருளாளர் க.சோமநாதன், உறுப்பினர்களாக சி.பசுபதிப்பிள்ளை, க.விஜயன், க.தேனுகா, க.பொன்னம்பலம், பு.பரமேஸ்வரன், ச.தேவி, சி.ராசாத்தி, ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(9)

## மாலை நேரக்கற்றலில் ஈடுபடும் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன!

வட்டக்கச்சி ——

கிளிநொச்சி பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தால் மாலை நேர கல்வியில் ஈடுபடும் மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மாயவனூர் பொது மண்டபத்தில் ஊடகவளர்ச்சி தலைவர் சி.திவாகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் மா.வினோ மற்றும் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன உறுப்பினர்கள், மகளிர் அமைப்பினர், முன்பள்ளி ஆசிரியர்கள், மாயவனூர் கிராம அலுவலர் ரூபசிங்கம், மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(09)

## சேதமடைந்த வீட்டு உரிமையாளர்களுக்கு முல்லைத்தீவில் இந்த வாரம் கொடுப்பனவு

### அரச செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு ——

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு இந்தவாரம் முதற்கட்ட கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரச செயலக திட்டப்பணிப்பாளர் எம்.குணசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமி அனர்த்தத்தால் முற்று முழுதாக அழிவடைந்த வீடுகளுக்கு இரண்டரை லட்சம் ரூபாவும், ஒரு பகுதி பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ஒரு லட்சம் ரூபாவும் மீள் நிர்மாணத்துக்கென அரசால் வழங்கப்பட்டு வருகிறது.


இந்த மாவட்டத்தில் சுனாமியால் வீடுகளை இழந்தவர்கள் கிராம அலுவலர் மூலமாக ஏற்கனவே கொடுப்பனவுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களுக்கான முதற்கட்ட கொடுப்பனவு முல்லைத்தீவு இலங்கை வங்கி மூலமாக வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் 4 ஆயிரத்து 23 வீடுகள் முற்றாக அழிந்துள்ளன. 424 வீடுகளின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்கள் 21 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இதைவிட சுனாமி அனர்த்தம் காரணமாக 3 ஆயிரத்து 323 பேர் இறந்துள்ளனர். 40 குடும்பங்களில் ஒருவர்கூட மிஞ்சாமல் இறந்துள்ளனர்.




### ஒகஸ்ட் - 09

1870: திருமணமான பெண்கள் சொத்துரிமைச் சட்டம் என்ற சட்டமூலத்தைப் பிரித்தானிய நாடாளுமன்றம் நிறைவேற்றியது.

1896: பறவைகள் சிறகடித்துப் பறப்பது போல, இறக்கை அடித்துச் செல்லும் ஓர்னி தாப்டர் என்னும் கிளைடர் வகை விமானத்தை வடிவமைத்து 2000 இற்கும் மேற்பட்ட தடவைகள் அதில் பறந்து காட்டிய ஜேர்மனிய ரான ஓட்டோ விலியம் என்பவர் - இவ்வாறு பறக்கும் போது விமானம் விழுந்து நொருங்கியதால் மரணமடைந்தார்.

1945: ஜப்பானின் நாகசாகி நகர் மீது அமெரிக்கா இரண்டாவது அணுகுண்டை வீசியது. 74 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இறந்து போயினர். 150 லட்சம் பேர்வரை கடும் பாதிப்புக்கு உள்ளாகினர். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடிக் கட்டடங்கள் எரிந்து அழிந்தன. இந்த அணுகுண்டு வீச்சுக்குப்பின் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் - வானொலி மூலம் ஜப்பான் உடனடியாகப் போரை நிறுத்தி சரணடையாவிட்டால் அந்த நாடே அழிக்கப்பட்டு விடும் என எச்சரித்தார். அதையடுத்து ஜப்பான் நிபந்தனையற்ற சரணாகதியடைந்தது.

1965: மலேஷிய சமஷ்டியிலிருந்து சிங்கப்பூர் பிரிந்து சென்று தனி நாடானது.

1967: தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு உருவாகியது.

1969: பையான் என்னும் புதிய அடிப்படை அணுத்துகள்களைக் கண்டு பிடித்ததற்காக 1949 ஆம் ஆண்டு பௌதீகவியலுக்கான நோபல் பரிசைப் பெற்ற பிரித்தானிய விஞ்ஞானி செசில் பிராங்க் பவல் காலமானார்.

1971: இருபது வருட நட்புறவு ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும் - சோவியத் யூனியனும் ஒப்பமிட்டன.

1972: தனது நாட்டிலுள்ள சுமார் 60 ஆயிரம் ஆசியர்களையும் மூன்று மாத காலத்துள் நாட்டை விட்டு வெளியேறுமாறு உகண்டா ஜனாதிபதி இடி அமீன் உத்தரவிட்டார்.

1973: செவ்வாய்க்கிரகத்தை நோக்கி ரஷ்யா மார்ஸ் - 7 என்ற விண்கலத்தைச் செலுத்தியது. ஆனால் அது இலக்குத் தவறிச் சென்றுவிட்டது.

1976: சந்திரனை நோக்கி இதேநாளில் செலுத்தப்பட்ட லூனா - 24 என்ற விண்கலம் - சந்திரனில் நெருக்கடிக் கடல் என்ற பகுதியில் இந்த மாதம் 18 ஆம் திகதி தரையிறங்கி, 170 கிலோ நிலா மண்ணை எடுத்துக் கொண்டு பூமிக்கு பயணித்து, இந்த மாதம் 23 ஆம் திகதி சைபீரியாவில் வந்திறங்கியது.

1991: இலங்கையில் இரண்டு இராணுவங்கள் உள்ளன என உலகை வர்ணிக்க வைத்த ஆகாய, கடல் வெளிச்சமரின் இறுதி நாள். இந்தச் சமர் 10.07.1991 இல் ஆரம்பமாகியது. இந்தச் சமரின் போது 602 விடுதலைப் புலிகள் மாவீரராகினர்.

1992: மட்டக்களப்பு - ஆயித்திமலையில் 50 இற்கும் மேற்பட்ட தமிழ் விவசாயப் பொதுமக்களை சிங்கள இராணுவம் கொன்றழித்தது.

☆ சிங்கப்பூர் சுதந்திர தினம்.

தொகுப்பு - சந்துரு

## நமது ஈழநாடு

**வைர வரிகள்**

சிம்மாசனத்தை நோக்கிப் புழுவாக
நெளிவதைவிடப் புழுதியில் ராஜாவாக
இருக்கலாம்..

- யாரோ

## நமது நோக்கு

### வாக்குறுதிகள் தேவையில்லை; நடைமுறைப்படுத்தலே அவசியம்!

இலங்கையில் போர்நிறுத்தம் - மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு இப்போது ஏற்பட்டுள்ள ஆபத்து நிலைக்கு யார் காரணம் எனப் பரவலாக எழுப்பப்பட்டுவரும் வினாவுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ஹக்ரப் ஹொக்லண்ட் அவர்கள் மிகவும் உறுதியான ஒரு பதிலை ரொய்ட்டா செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளாா என்றே கூறவேண்டும்.

சமாதான முன்னெடுப்பு முயற்சிகளில் ஓரளவுக்கு களைதலும், சலித்துப் போயிருந்தாலும் அதனை வெளிக்காட்டாதவாறு தொடர்ந்தும் தமது முயற்சிகளை 'விக்கிரமாதித்த' உறுதியுடன் மேற்கொண்டுவருகின்ற நோர்வே அரசின் அனுசரணையாளர்களும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் - நாளுக்குநாள் 'இடியப்பச் சிக்கலாகி'வரும் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வை எட்டக் கடுமையாக உழைத்துவருகின்ற அதேவேளை, சமாதான முயற்சிகளை முன்நகர்த்த மிகவும் அவசியமாக உள்ள இயல்புச் சூழலை உருவாக்கமுடியாது திணறிவருவதும் உண்மையே...!

சாண் ஏற முழம் சறுக்கும் நிலையில் இருக்கும் அமைதி முயற்சிகளின் எதிர்காலம் குறித்த சகலவிதமான நம்பிக்கைகளும் அற்றுவரும் சாத்தியமே அதிகரித்துள்ள சூழலில் -அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பரஸ்பர நல்லுறவையும், நம்பிக்கையையும் கட்டியெழுப்பப் பாடுபட்டுவரும் சூழலில் - அனுசரணையாளர்களும், போர்நிறுத்தக கண்காணிப்புக் குழுவினரும் இதற்கான மூலகாரணத்தை சரியாக இனங்கண்டுகொண்டுள்ளனர் என்பதை ஹொக்லண்ட் அவர்களின் பேட்டியிலிருந்து உணர்ந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் மீண்டும் யுத்தம் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் தென்படுவதாகக் குறிப்பிட்டுள்ள ஹொகலண்ட், இதனைத் தவிர்க்க சம்பந்தப்பட்ட இருதரப்பினரிடையேயும நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு கிழக்கில் செயற்படும் ஆயுதக் குழுக்களே தடையாக இருப்பதாகவும கூறியுள்ளார்.

அதுமட்டுமல்லாது, போர்நிறுத்த உடன்பாட்டை முழுமையாக அமுல்செய்வது இந்த நிலையில் மிகவும் அவசியமாக உள்ளது என்றும் கூறியுள்ள அவர், அதற்கு இரு தரப்பினரும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

உணமையில் இன்றைய நெருக்கடி நிலைக்கு முழுப் பொறுப்பையும் அரச தரப்பே ஏற்கவேண்டும் என்பதில் எவ்வித முரணபட்ட கருத்தும் இருக்கமுடியாது.

போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த காலம்முதலே ஆட்சிப்பீட அதிகார வலுவைக் கொண்டவரான ஜனாதிபதி, அந்த நகர்வுகள் அனைத்தையும் நிராகரிக்கும் மனப்பாங்கு சிறிதும் அற்ற ஒருவராக மட்டுமல்லாது - அதனைக் குழப்பி, சிதைக்கும மூலோபாயத் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த காலம் பார்த்து நின்ற ஒருவராகவே விளங்கினார்.

அதிகார வலுவற்ற அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவோ, தீர்மானம் எடுக்கும் உரிமையற்ற ஒருவராக சமாதான முயற்சிகளை ஓரளவுக்கு இழுத்துச்செல்ல முயன்றபோதிலும் - புரிந்துணர்வு உடன்பாட்டில் உள்ள பல முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்தும் நேர்மையும், திராணியுமற்ற ஒருவராகவே இருந்தார்.

இதன் காரணமாக புரிந்துணர்வு உடன்பாடு முழுமையாக அமுல்செய்யப்படாமல், சமாதான எதிர்பார்ப்புக்கள் எல்லாம் அர்த்தமற்ற விடயங்களாகிவிட, ஒப்பந்தம் ஆவணக்காகிதங்களுள மட்டும் அடங்கிப்போயிற்று.

உடன்பாட்டின் பிரகாரம் அமுல்செய்யப்படவேண்டிய முக்கிய விடயங்களை ஒப்புக்கொண்டபடி, நடைமுறைப்படுத்துமாறு அனுசரணையாளர்களும், சர்வதேச சமூகமும் அரசாங்கத்துககுக் கடுமையாக அழுத்தம் கொடுத்து, அதனை யதார்த்த பூர்வமாக்கியிருப்பார்களேயானால், இன்று ஏற்பட்டுள்ள நெருககடி நிலை ஏற்பட்டிருக்காது.

மூன்றரையாண்டு காலமாக உடன்பாட்டில் கையெழுத்திட்ட ஒரு சாராரின் கோரிக்கைகள் அனைத்தும் வெறுமனே காற்றோடு போய்விட்ட செய்திகளாகிவிட்ட நிலையில் -சமாதானம் தனது உயிர்ப்புத் தன்மையை இப்போது முற்றாக இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதேசமயம், ஹொக்லண்ட் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று- இன்றைய நம்பிக்கையீனங்களுக்கு கிழக்கில் செயறபடும் ஆயுதக்குழுக்களே காரணம் என்ற கருத்துநிலை உருவாகக் காரணமும் அரசாங்கமேயாகும். அரசும், ஆயுதப படையினரும மறுத்து நிராகரித்தாலும்கூட, இந்த ஆயுதக்குழுககள் அவர்களின் அனுசரணை - மற்றும் நெறிப்படுத்தலில் இயங்குபவர்கள்தான் என்பதில் ஐயமில்லை.


எனவே, அவர்களைக் கட்டுப்படுத்தும், இவர்களின் ஆயுதஙகளைக் களைந்து, கிழக்கில் நிலவும் பீதி நிலையைத் தணிக்கும பொறுப்பும் அரசுக்கேயுண்டு. ஆனால் அவர்கள் அதனைச் செய்வார்களா என்பதே கேள்வி.

செய்யமாட்டார்கள். அவர்களின் அரசியல் நோக்கஙகளுக்கு அந்தக் குழுக்களின் உதவி அவசியம் என்றே கருதுகிறார்கள். இந்த நிலைமையில் - நோர்வே அனுசரணையாளர்களும், சர்வதேச சமூகமும், அரசு வழங்கும் வெற்று வாக்குறுதகளையும் மாற்றுத்திட்ட யோசனைகளையும் தமிழ் மக்களுக்குக் காட்டி அவர்களை இனிமேலும் ஏமாற்றிக் காலம் கடத்துவதில் அர்த்தமில்லை.

நியாயத்தையும், உண்மையையும் புரிந்துகொண்ட பின்னரும் அதுகுறித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ள காலம் தாழ்த்துவது ஏன் என்பதுதான் தெரியவில்லை.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




செய்தி: - ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. சார்பில் விமல் வீரவன்ச போட்டியிடவுள்ளார்.

# படையினரால் தடுத்து வைக்கப்பட்ட சிறுவன் குறித்து தகவல் இல்லை!

யாழ்ப்பாணம்

வன்னியில் உள்ள தனது உறவினர்களைப் பார்க்கச் சென்றபோது படையினரால் தடுத்து வைக்கப்பட்ட சிறுவன் குறித்து இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லையென - பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

கடந்த 17ஆம் திகதி வன்னியில் உள்ள தனது உறவினர்களைப் பார்க்கச்சென்ற கொடிகாமம் - அல்லாரைப் பகுதியைச் சேர்ந்த கருணாகரன் சசிகரன் (வயது 16) என்ற சிறுவன் முகமாலை ராணுவ சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டார்.

பின்னர் இந்தச் சிறுவன் விடுவிக்கப்படாமை குறித்து - சிறுவனின் பெற்றோர் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு மற்றும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டைத் தெரிவித்தும் இதுவரை சிறுவன் குறித்த எந்தவித தகவலும் கிடைக்கவில்லை.

தம்முடைய மகன் யாழ்.குடாநாட்டிலுள்ள ஏதோவொரு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று இவருடைய பெற்றோர்கள் தெரிவிப்பதுடன், இது குறித்து உரிய விசாரணைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொண்டு தம்முடைய மகனை மீட்டுத்தரும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# மக்கள் எழுச்சியின் மூலம் மட்டுமே போராட்டத்தின் இலக்கை அடையலாம்

## அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா

கிளிநொச்சி

ஒரு விடுதலைப் போராட்டத்தின் இலக்கை மக்கள் எழுச்சி மூலமே அடையமுடிகிறது என - தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற அரச பணியாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது விடுதலைப் போராட்டம் போரின்மூலம் தனது பலத்தை நிலைநிறுத்தி சமாதானச் சூழலுக்குள் நுழைந்தது. சமாதானச் சூழல் ஏற்பட்டு மூன்றரையாண்டுகள் கடந்த நிலையிலும், தமிழ் பேசும் மக்கள் எந்தவித முன்னேற்றங்களையும், இலக்குகளையும் அடையவில்லை.

சமாதானச் சூழல் தமிழ் மக்களின் பலத்தைச் சிதறடித்துவிடக்கூடாது. பலமான நிலையில் இருக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் மட்டுமல்ல - அரசியல் ரீதியாகவும் சர்வதேச சமூகத்தைக் கவர்ந்துள்ளனர்.

குறிப்பாக சுனாமி ஏற்பட்ட சமயம், புலிகள் மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகள் சர்வதேச சமூகத்தைக் கவர்ந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுவரும் ஆதரவுப் பலம் சிதைந்துபோகாமல் பாதுகாக்க வேண்டிய பணி எல்லோர் மத்தியிலும் உள்ளதெனவும் தெரிவித்தார்.

# மானிப்பாய் பிரதம தபாலகம் பிரதேசசபைக் கட்டடத்தில்!

மானிப்பாய்

மானிப்பாய் தபாற்கந்தோரை மானிப்பாய் பிரதேசசபையின் கட்டடத் தொகுதியில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மானிப்பாய் பிரதேச சபையில் அமைந்துள்ள மாடிக்கட்டடத்தில் தபாற்கந்தோரை இயங்கவைக்க தாம் அனுமதிப்பதாகவும், இதற்கான கோரிக்கை சண்டிலிப்பாய் பிரதேச செயலரால் தமக்கு விடப்பட்டால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும் என மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

மானிப்பாய் தபாற்கந்தோர் இதுவரைகாலமும் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (44)

# மாதகல் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பம்!

மாதகல்

மாதகல் தெற்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள போயிட்டி என்ற இடத்தில் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தால் மிதிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட மிதிவெடிகள் கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன என்றும், தொடர்ந்தும் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிதிவெடி அபாயம் காரணமாக இந்தப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வீடுகளில் மீளக்குடியமரமுடியாத நிலையில் இருந்துவருகின்றனர்.

இது விடயமாக அந்தப்பகுதி மக்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக - யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் விடுத்திருந்த வேண்டுகோளை அடுத்து இந்த மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் சீர்திருத்த பள்ளியை மீள இயக்க நடவடிக்கை!

மட்டுவில்

சமூக நலத்துறைத் திணைக்களத்தின்கீழ் இயங்கிவந்த சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையை மீள இயக்குவதற்கு மேற்படி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக சீர்திருத்தப் பாடசாலை அதிபர் பதவி நிரப்பப்படவுள்ளது.

இந்தப் பதவிக்கு சமூக சேவை அலுவலர்கள், சிறுவர் நன்னடத்தை அலுவலர்கள் ஆகியோர் விண்ணப்பிக்கமுடியும்.

விருப்பமுடைய மேற்படி அலுவலர்கள் மட்டும் உடனடியாக விண்ணப்பிக்கும்படி சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் என்.ஆர்.றஞ்சினி கேட்டுள்ளார்.


**நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியை விட்டுப் போவதென்பது - மனதளவில் மிகவும் கஷ்டமான ஒன்றுதான். எனவே இறுதிவரை பதவியில் ஒட்டி இருப்பதையே சந்திரிகா விரும்புவார்.**

**தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்கும் வரை இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை. தேர்தல் ஆணையாளர் இவ்வாண்டுதான் தேர்தல் என்று அறிவித்தால், அதுதான் இறுதித் தீர்ப்பாக இருக்குமா? அல்லது தேர்தல் ஆணையாளரின் முடிவுக்கு எதி ராக நீதிமன்றத்துக்குச் செல்ல முடியுமா? என்பதெல்லாம் கேள் விக்குரியனவே.**

# சந்திரிகா வகுக்கும் தேர்தல் வியூகம் அறுவடை செய்யப் போவது யார்?









**நா**டாளுமன்றத் தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு நடைபெறாது. எவர் விலகினாலும், மக்களின் ஆதரவு எமக்கு இருக்கின்றது. எனவே ஆட்சி தொடரும். அதேபோன்று ஜனாதிபதித் தேர்தலும் 2006 ஆம் ஆண்டில்தான் நடைபெறும். கூட்டங்கள் வைப்பதாலும், மக்களை அழைத்து ஊர்வலங்கள் வைப்பதாலும் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டி வைக்கமுடியாது. இவ்வாறு உரத்துக் கூறிவருகிறார் ஜனாதிபதி சந்திரிகா.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிப் பதவியை விட்டுப் போவதென்பது - மனதளவில் மிகவும் கஷ்டமான ஒன்றுதான். எனவே இறுதிவரை பதவியில் ஒட்டி இருப்பதையே சந்திரிகா விரும்புவார்.

தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவிக்கும் வரை இந்தப் பிரச்சினை தீரப்போவதில்லை. தேர்தல் ஆணையாளர் இவ்வாண்டுதான் தேர்தல் என்று அறிவித்தால், அதுதான் இறுதித் தீர்ப்பாக இருக்குமா? அல்லது தேர்தல் ஆணையாளரின் முடிவுக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் செல்ல முடியுமா? என்பதெல்லாம் கேள்விக்குரியனவே.

மகிந்த ராஜபக்ஷவா அல்லது அநுரா பண்டாரநாயக்கவா ஜனாதிபதி வேட்பாளர் என்ற போட்டி - சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ளது. இதன் உச்சக் கட்ட முரண்பாடு பொது மேடைகளிலும் பெரிதாக வெடிக்கத் தொடங்கியுள்ளது. மகிந்த ராஜபக்ஷவைச் சந்திரிகா விமர்சிப்பதும், சந்திரிகாவை மகிந்த ராஜ பக்ஷ விமர்சிப்பதும் இந்த மோதல்களின் வெளிப்பாடேயாகும்.

பண்டாரநாயக்க குடும்பத்தின் கடைசி வாரிசான அநுரா பண்டாரநாயக்கவை விட்டுக் கொடுக்கச் சந்திரிகா விரும்பவில்லை. தானே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக இருக்க வேண்டுமென்பது ராஜபக்ஷவின் விருப்பாகும். இதற்காக அவர் ஜே.வி.பியின் ஆதரவையும் பெற்றுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதிலும் பார்க்க முன் கூட்டி நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது சில அனுகூலங்களைக் கொடுக்கும் எனச் சந்திரிகா நினைக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றவிடாது எதிர்த்து வாக்களிக்கும் எனத் தெரிவித்துள்ளது.

அவ்வாறு வரவு - செலவுத் திட்டத்தில் தோற்றுப் போய்த் தேர்தலைச் சந்திப்பதிலும் பார்க்க, முன்கூட்டியே தேர்தலைச் சந்திப்பதைச் சந்திரிகா விரும்புவார். இதிலே அவருக்கு மூன்று நிலைச் சாதகம் இருக் கக்கூடும். வரவு - செலவுத் திட்டம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு, வாக்கெடுப்பு நடப்பதற்குள் தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதித் தேர்தல் திகதியை அறிவித்து விட்டால், பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிடும். அதனைத் தவிர்ப்பது முதற்காரணமாகும்.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததால் மேலதிகமாக ஒரு லட் சம் வாக்குகளையே ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி கடந்த தேர்தலிலும் பார்க்கப் பெற்றது. இது பெரிய லாபம் அல்ல. இந்தக் கூட்டணியால் ஜே.வி.பி தான் அதிக இடங்களைப் பிடித்தது என்று சந்திரிகா கூறிவருகிறார். எனவே தேர்தல் ஒன்றை நாடாளுமன்றத்துக்கு நடத்தினால் பாதிக்கப்படப் போவது பெருமளவில் ஜே.வி.பிதான். எனவே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி ஜே.வி.பியினரின் பலத்தைக் குறைத்து விட்டால், அவர்களது கொக்கரிப் புக் கொஞ்சம் அடங்கிவிடும் என்பது இரண்டாவது காரணமாகும்.

ஜே.வி.யினரின் பலம் குறைந்து விட்டால் அவர்களை நம்பியிருக்கும் மகிந்த ராஜபக்ஷவும் சற்று அடங்கிப்போய் விடுவார். இது மூன்றாவது காரணமாகும். இவ்வாறான நிலையில் தம்பி அநுராபண்டார நாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக்குவது சற்றுச் சுலபமாகும் என்பதே சந்திரிகாவின் நினைப்பாகும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் முடிவு எவ்வாறு இருக்கும்? தொங்கு நாடாளுமன்றம் தான் அமையுமா? ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்குமா? என்பவை அடுத்து எழும் கேள்விகளாகும். அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய 'மக்கள் பலம்' என்ற ஊர்வலத்தின் இறுதிக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தொகை ஐக்கிய தேசியக் கட்சிக்குச் குறைந்தளவு ஆதரவு கூடியிருப்பதாகக் காட்டுகிறது. ஜே.வி.பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டுச் சேராமல் தனித்துப் போட்டியிடும் போது, ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சற்று ஆறுதலான நிலையே இருக்கும். கூடுதல் உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டால், ஆளும் கட்சிப் பக்கம் ஆதரவளிப்பதையே கொள்கையாகக் கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், முஸ்லீம் கட்சிகளும் இருக்கவே இருக்கின்றன ஆதரவு வழங்க. அப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அமைக்கும்.

அப்படியொரு நிலையில் அமைச்சரவை நியமிப்பதில் இழுபறிநிலை மீண்டும் ஏற்படுமா ? அல்லது சந்திரிகா விட்டுக் கொடுப்பாரா? பாதுகாப்பு அமைச்சைச் சென்றமுறை முதலில் விட்டுக் கொடுத்துவிட்டுப் பின்னர் பறித்தவர் இம்முறை எவ்வாறு நடந்துகொள்வார் ? என்பன சிக்கல் நிறைந்தவைகளாகவே உள்ளன.

சந்திரிகா விட்டுக் கொடுத்தாலும், விட்டுக் கொடாவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தால் அடுத்து உடனே ஜனாதிபதித் தேர்தல் நடக்குமானால், அது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாதகமாகவே அமையும். அதேநேரம் ஜனா திபதித் தேர்தல் 2006 ஆம் ஆண்டு இறுதியில் நடக்குமானால், ஐக்கிய தேசியக் கட்சியின் குறைகளை மக்கள் முன் வைத்து, இனவாதத்தையும் முன் வைத்து மக்களைச் சந்திப்பது சற்று சாதகமாக இருக்கலாம். எனவே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் வரலாம் என்பதே கணிப்பாகும்.

ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடைபெற்றால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்து லாபம் பெறலாம் என்பது ஜே.வி.பியின் திட்டமாகும். மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து, மங்கள சமரவீரவின் ஆதரவையும் பெற்றால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபடும். அந்தப் பிளவின் மூலம் ஜே.வி.பியை வளர்க்கலாம் என்று நினைத்திருந்தனர். நாடாளுமன்றத் தேர்தல் முதலில் நடைபெறுமாகவிருந்தால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடனடியாகவோ அல்லது எப்பொழுதுமோ பிளவுபடப்போவதில்லை.

எனவே தற்போது 34 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் ஜே.வி.பி பெரிய பாதிப்படையும். அப்பொழுது ஜே.வி.பியை நம்பி மகிந்த ராஜபக்ஷ செல்ல மாட்டார். பிரிந்து தனிக்கட்சி அமைப்பதும் சிரமமானதே. எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்திருப்பார். அநுரா - ஜனாதிபதி வேட்பாளரானாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் அவரை ஆதரிக்கவே செய்வார்.

தேர்தல் களம் எப்படி இருக்கும்? சென்றமுறை யுத்தநிறுத்த ஒப்பந்தம் தேர்தல் பிரச்சாரத்தில் முதலிடம் பெற்றது. இந்த முறை அதனுடன் சேர்ந்து சுனாமிப் பொதுக்கட்டமைப்பும் பிரச்சாரத்தில் இடம் பெறும். ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் இவற்றை வைத்துச் சிங்கள - பௌத்த இனவாதத்தை தங்கள் பிரச்சாரத்தில் முதனிலைப்படுத்துவர்.

ஐக்கிய தேசியக் கட்சி - சுனாமி பொதுக் கட்டமைப்புப் பற்றி இரட்டை நிலை எடுத்துள்ளதால், நழுவல் போக்கையே பின்பற்றும் சந்திரிகா, புலிகள் அரைவாசி ஜனநாயகத்துக்கு வந்துவிட்டார்கள், புலிகளுக்கு அதிகாரம் எதுவும் இந்தக் கட்டமைப்பு மூலம் வழங்கப்படவில்லை என்று கூறுவார்.

இவ்வாறு உரிமை இழந்த மக்களையும், சுனாமியால் பாதிப்புற்ற மக்களையும் மையமாக வைத்து தேர்தல்களம் இருக்கப்போகிறது. சிங்கள மக்கள் போரையா? சமாதானத்தையா விரும்புகிறார்கள் என்பது இந்தத் தேர்தல் மூலம் தெரிய வரப்போவதில்லை. மக்கள் சமாதானத்தை விரும்பி வாக்களித்த பொழுதெல்லாம் அதற்குப் புது அர்த்தம் கொடுத்தவர்கள் சிங்களத் தலைவர்கள்.

சமாதானத்துக்காகக் குரல் கொடுத்ததன் மூலம் 1994 ஆம் ஆண்டில் பெரிய வெற்றியீட்டிய சந்திரிகா - நடத்திய சண்டைக்குக் காரணம் சமாதானத்தைக் கொண்டுவருவதற்காக என்று புது விளக்கம் கொடுத்தவர் . அவரது காலத்திலேயே மக்கள் அவலத்தின் உச்சத்துக்குச் சென்றனர். சமாதானம் கொண்டு வருவதாகக்கூறி, ரணில் பின்னர் மக்களிடம் சென்றார். மக்கள் அதற்கு ஆதரவு கொடுத்தனர்.

சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தனவே அன்றி, தமிழ் மக்களது நிலையில் மாற்றங்கள் சிறிதளவு கூட ஏற்படவில்லை. சமாதான ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட எந்தவொரு அம்சமும் நிறைவேற்றப்படவில்லை. இடம் பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியவில்லை. பயிர்ச்செய்கை நிலங்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் இருந்தன. பள்ளிக்கூடங்களும் அதே ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் இருந்தன. இராணுவ அதிகாரிகள் கூற்றுக்கமையவே தீர்மானங்களை முடிவு செய்தார்.

இந்திய இராணுவ அதிகாரிகளை அழைத்து முடிவுகளை மேற்கொண்டார். சமாதானம் என்ற போர்வைக்குள் நின்று கொண்டு, வெளிநாட்டு அழுத்தங்கள் மூலம் புலிகளுக்கு நெருக்கடிகள் கொடுக்க முனைந்தார். ஆட்சி பறிக்கப்பட்டு புதிய தேர்தல் வந்தது. பல தளபதிகள், போராளிகள், ஆதரவாளர்களையும் புலிகள் சமாதான காலத்தில் இழந்து நிற்கின்றனர். இந்த நிலையிலேயே இலங்கை - தேர்தலுக்குச் செல்கிறது.

தமிழ் மக்கள் சென்றமுறை காட்டிய ஒற்றுமையிலும் பார்க்க, கூடிய ஒற்றுமையைக் காட்ட வேண்டும். சென்றமுறை தப்பித் தவறி இரண்டொரு ஆசனங்கள் தவறவிடப்பட்டன. அத்தகைய தவறை இந்தமுறை தமிழ் மக்கள் விடக்கூடாது.

வெளிநாடுகள் சிங்களக் கட்சிகளின் பேரினவாதச் சிந்தனைகளை அறிந்து கொண்டுள்ளனர். சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு உரிமைகள் எதனையும் வழங்கப்ப போவதில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டு வருகின்றனர். அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளும் நிலையில், எமது உரிமைகளுக்காக அவர்களது பங்களிப்பு முழுமையாக இருக்கும். எனவே நாம் ஒற்றுமையாக, ஓரணியில் உள்ளோம் என்பதையும் தமிழ்த் தேசியத் தலைவரின் பின்னால் ஒரே அணியில் திரண்டுள்ளனர் தமிழ் மக்கள் என்பதையும் உலகறியச் செய்ய வேண்டும்.

பிந்திக் கிடைத்த தகவல்களின் படி, மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தச் சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவு செய்துள்ளதாக அறிய முடிகிறது. அநுரா பண்டாரநாயக்கவை பிரதமருக்கான வேட்பாளராக்குவதெனவும், இந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது. இதன்படி பார்த்தால் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதன் மூலம், ஜே.வி.பியின் ஆதரவை மீண்டும்பெற மேற்கொள்ளப்படும் முயற்சியாக இதைக் கருதலாம்.

பொதுக்கட்டமைப்பின் முக்கிய சரத்துக்களுக்கு இடைக் காலத்தடை விதிக்கப்பட்ட நிலையில், காற்றுப்போன பஸ் என ஜே.வி.பியினரால் வர்ணிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்புடன் மஹிந்த ராஜபக்ஷவை அவர்கள் ஆதரிக்கக்கூடும். ஆனால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமானால், அநுராவை பிரதமர் வேட்பாளராக கொண்டே, சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேர்தலை எதிர்கொள்ளும். தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதனை ஏற்றுக் கொள்வது சில இடைஞ்சல்களை அவருக்கு ஏற்படுத்தலாம்.

ஆனால் சிங்களப் பேரினவாதிகள் மீண்டும் ஒன்று சேரப் போவதையே ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தெரிவு காட்டுகிறது. பொதுக்கட்டமைப்பு கொண்டு வரப் போவதாக உலக நாடுகளுக்கு கண்துடைப்பு நாடகம் நடத்திய சந்திகாவின் நகர்வு முற்று முழுதாகச் சிங்களப் பேரின வாதிகளின் ஒன்றிணைவிலேயே இறுதியில் முடிந்திருக்கிறது என்பதை தமிழ் மக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

# வட - கிழக்கு மாகாண தமிழ் மொழித்தினப் போட்டி - 2005
# தேசிய மட்ட நிகழ்ச்சிகளுக்கான மாவட்ட மட்ட முடிவுகள்!

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பாட சாலைகள் இடையே வவுனியாவில் கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற தேசிய மட்ட நிகழ்ச்சி களுக்கான மாவட்ட மட்டப் போட்டிகளில் யாழ். மாவட்டம் 113 புள்ளிகளைப் பெற்று முதலிடத் தைப் பெற்றுக் கொண்டது.

இதில் திருகோணமலை 83, வவுனியா 73, மட்டக்களப்பு 48, கல்முனை 38, முல்லைத்தீவு 34, கிளிநொச்சி 29 புள்ளிகளைப் பெற்று முறையே இரண்டு தொடக்கம் எட்டு வரையான இடங்களைப் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் கள் விபரம் வருமாறு :

## வாசிப்பு

*முதலாம் பிரிவு*

யூடி.மதுசிகா மனோகிதராஜ் (மட்.கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலயம்), து.மாலோகன் (யா.கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), கு.டிருஷா (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி),

*இரண்டாம் பிரிவு*

ஞானேந்திரராசா தாமரா (மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), ஜெ.லக்ஷி (யா.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெ.ஜெயந்தினி (வ.இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி.

## ஆக்கத்திறன் வெளிப்பாடு

*முதலாம் பிரிவு*

இ.ஸ்ரீதிவாகரன் (யா.கரணவாய் தாமோதர வித்தியாலயம்), கே.எம்.சஹறதும்நிஷா (கல்.அஸ்–ஸிறாஜ் மகா வித்தியாலயம்), மா.துவாரகா (மு.கைவேலி கணேசா வித்தியாலயம்),

## ஆக்கம் எழுத்து

*முதலாம் பிரிவு*

சோமசேகரம் திரியம்பகி (யா.இந்து ஆரம்ப பாடசாலை), த.பவிதா (தி.புனித பிரான்ஸிஸ் சவேரியார் மகா வித்தியாலயம்), ஜீவதாஸ் டல்சிக்கா (மட்.கோட்டமுனை கனிஸ்ட வித்தியாலயம்)

## கட்டுரை வரைதல், கடிதம் வரைதல்

*இரண்டாம் பிரிவு*

வல்லிபுரநாதன் சுஜீவன் (யா.ஹாட்லிக் கல்லூரி), சுப்பிரமணியம் சாகித்யா (மட். ஆரையம்பதி ஈ.கி.மி. பாடசாலை), சி.தனுஷியா (தி.பேராறு பரமேஸ்வரா மகாவித்தியாலயம்),

*மூன்றாம் பிரிவு*

பிரவீனா கிருபைராஜா (தி.சென்மேரிஸ் கல்லூரி), அனோஜா வரதராஜன் (கிளி. முருகானந்தா மகா வித்தியாலயம்), விநாயகமூர்த்தி சரணா (மட். துறைநீலாவணை மகா வித்தியாலயம்),

## கட்டுரை வரைதல், கவிதை நயத்தல்

*நான்காம் பிரிவு*

குகாஞ்சனா கணேஸ் (தி.சென்மேரிஸ் கல்லூரி), சி.தட்சாயினி (முல். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஆனந்தகுமார் மோகனப்பிரியா (யா.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

## தமிழியற் கட்டுரை வரைதல்

## இலக்கியம் நயத்தல்

*ஐந்தாம் பிரிவு*

அ.கார்த்திகா (வவு.பாவற்குளம் கணேசா வித்தியாலயம்), கனகரத்தினம் நிஷாந்தி (கிளி. உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), த.மரியகொன்சலிற்றா (தி.புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயம்)

## இலக்கணப் போட்டி

*நான்காம் பிரிவு*

கி.கிருஷ்ணவேணி (வவு.ரம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்), செ.மு.மென்செல்தபா ஆப்தின் (கல்.அல் மனார் மத்திய கல்லூரி), உ.தனுஷா (யா.வேம்படி மகளிர் கல்லூரி),

*ஐந்தாம் பிரிவு*

இளைய தம்பி சுபலக்ஷ்மி (மட்.வந்தாறுமூலை மகா வித்தியாலயம்), வே.பிரபாசீலன் (தி.இ.கி.மி.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி). க.அனுஷா (யா.இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்).

## திறனாய்வுப் போட்டி

*ஐந்தாம் பிரிவு*

எஸ்.கிறிசாளினி (கமு.கார்மேல் பாத்திமா கல்லூரி), சுமதி சிவசுப்பிரமணியம் (கிளி. திருவையாறு மகா வித்தியாலயம்), ச.நிரஞ்சலா (யா.ஸ்கந்தவரோதயக் கல்லூரி),

## குறுநாடக ஆக்கம்

*நான்காம் பிரிவு*

வீ.இமாஜினி (யா.ஸ்கந்தவரோதயக் கல்லூரி), ஜே.லோஜனா (கமு.விபுலானந்தா மத்திய கல்லூரி), சி.சித்திரகலா (மட்.அமிர்தகழி ஸ்ரீ இ.கி.மி.வித்தியாலயம்),

*ஐந்தாம் பிரிவு*

யோ.ராஜ்மோகன் (வவு.பாவற்குளம் கணேஷா வித்தியாலயம்), ரு.தசோனியா (யா.புனித திரேஷா மகளிர் கல்லூரி), செ.பிரேமினி செபஸ்ரியன் (கிளி.அக்கராயன் மகா வித்தியாலயம்),

## கவிதை ஆக்கம்

*நான்காம் பிரிவு*

இ.அபிநயா (தி.சென்மேரிஸ் கல்லூரி), றொ.றெயின்சி பீரிஸ் (மன்.புனித மரியாள் பெண்கள் மகா வித்தியாலயம்), ஏ.எல். நஸ்ரீன் (க.மு ஆயிஷா மகளிர் கல்லூரி)

*ஐந்தாம் பிரிவு*

பா.திலீபன் (வவு.தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), ந.கோகுலவாணி (யா.நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி), ஜே.திவ்யா (முல்.குமுழ முனை மகா வித்தியாலயம்)

## சிறுகதை ஆக்கம்

*நான்காம் பிரிவு*

கு.பிந்துஜா (முல்.வித்தியானந்தாக் கல்லூரி), கு.வத்சலா (வவு.புதுக்குளம் மகா வித்தியாலயம்), சூ.பிரியசாந்தினி (க.மு.நாவிதன்வெளி அன்னமலை வித்தியாலயம்),

*ஐந்தாம் பிரிவு*

எம்.ஏ.எம்.மரீஹா (க.மு.முஸ்லிம் மத்திய கல்லூரி), நு.உதய கௌரி (யா.விக்ரோறியாக் கல்லூரி), சசிகலா சதாசிவம் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),

## பேச்சு

*முதலாம் பிரிவு*

ஜெ.ரிசாந் ( வ.தமிழ்.ம.ம.வித்தியாலயம்) ஞா.அபிராமி (யா. புனித. திரேசா மகா வித்தியாலயம்), நோ.திலைக்சன் (மன். புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி),

*இரண்டாம் பிரிவு*

சா.மதுரமி (யா.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சி.சங்கீர்த்தன் (வவுனியா.தமிழ்.ம.ம.வித்தியாலயம்), பே.போல்.அன்ரனி (மன்.இலகடிப்பிட்டி றோ.க.த.க.பாடசாலை),

*மூன்றாம் பிரிவு*

மோ.ஜெயபிருந்தா (மன்.வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை), சாருகா மதுரநாயகம் (கிளிநொச்சி மகா.வித்தியாலயம்), ஆனந்தராசா அனோஜி (மட்.கிரான்.மகாவித்தியாலயம்),

*நான்காம் பிரிவு*

வி.விஜயதர்சிக்கா (மன்.சித்திவினாயகர் இந்துக்கல்லூரி), ந.ஸாஹினி (யா.இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்), இரவீந்திரன் நிலோணி (மட். கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயம்), திருநயனி மனோகரன் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),

*ஐந்தாம் பிரிவு*

யோ.சுதாகரன் (யா.யூனியன் கல்லூரி),மரியதாஸ் ஆன் மதூசா (மன். புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), சி.வாசன் (வ.தமிழ் ம.ம. வித்தியாலயம்),

## பாவோதல்

*முதலாம் பிரிவு*

ஜெ.மதூஷிகன் (யா.கொக்குவில் இந்துக் கல்லூரி), நிதர்சனா விக்னேஸ்வரன் (கிளி.இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை), இ.பிரியங்கா (முல்.யோகபுரம் மகா வித்தியாலயம்),

*இரண்டாம் பிரிவு*

உ.தட்ஜெனன் (தி.நிலாவெளி த.ம.வித்தியாலயம்), ச.நிவாசினி (மு.யோகபுரம் மகா வித்தியாலயம்), கி.பார்த்திபன் (யா. யாழ்ப்பாணக் கல்லூரி),

*மூன்றாம் பிரிவு*

ந.ஜெனன் (வ.கல்மடு படிவம் - 1 அ.த.க.பாடசாலை), எம்.எப்.முகமட் கஹால்ஸ் (கமு. அல் - மனார் மத்திய கல்லூரி), கி.செறின் சியாமளா (மன். ஆண்டான்குளம் றோ.க.த.க.பாடசாலை),

*நான்காம் பிரிவு*

சு.பர்ஜீஸ் (கமு.அல் - மனார் மத்திய கல்லூரி), ரம்மியா ஆலாலசுந்தரம் (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), சதுர்திகா சக்கரவர்த்தி (மட். வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை),

*ஐந்தாம் பிரிவு*

இ.தனுஷன் (யா.மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), ச.எட்னா (மன். பாத்திமா ம.ம.வித்தியாலயம்), பா.மேகலா (மு.வற்றாப்பளை மகா வித்தியாலயம்),

## இசையும் அசைவும்

*முதலாம் பிரிவு*

அபிராமி வரதராஜ் (மட். புனித சிசிலியா மகளிர் கல்லூரி),ஆ.றோசி (வ.கிடாச்சூரி அ.த.க.பாடசாலை), றி.பாத்திமா றினேஷா (தி.சென்மேரிஸ் கல்லூரி),

## இசை (தனி)

*இரண்டாம் பிரிவு*

த.சர்மிளரூபன் (வ.தமிழ் ம.ம.வித்தியாலயம்), இ.வினோதினி (மு.வள்ளிபுனம் க.உ.வித்தியாலயம்), ஈ.துர்காஜினி (மன்.நானாட்டன் மகா வித்தியாலயம்), கஜினி நல்லதம்பி (மட். புனித சிசிலியா மகளிர் கல்லூரி),

*மூன்றாம் பிரிவு*

த.தர்ஷாந் (தி.புனித சூசையப்பர் கல்லூரி), அன்பரசி பாலகிருஷ்ணன் (கிளி.முருகானந்தா மகா வித்தியாலயம்), கவிசங்கரி ஜெயலோகேந்திரன் (மட். வின்சன் மகளிர் கல்லூரி),

*நான்காம் பிரிவு*

இ.கரசாகித்யன் (யா.சென். ஜோன்ஸ் கல்லூரி), க.நிரோஜினி (மு.புதுக்குடியிருப்பு மகளிர் கல்லூரி), அபிராஞ்சல்யா இராமலிங்கம் (மட். புனித சிசிலியா மகளிர் கல்லூரி), இ.சரண்யா (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி),

*ஐந்தாம் பிரிவு*

சி.ஜனகன் முத்துக்குமார் (யா.சென். ஜோன்ஸ் கல்லூரி). அ.மைதிலி காயித்திரி (மட். வின்சன்ட் மகளிர் கல்லூரி), கோ.கோசலா (மு.வித்தியானந்தா கல்லூரி),

## இசை (குழு)

*குழு - 1*

(வ.இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி), (கமு.அஸ்–ஸிறாஜ் மகா வித்தியாலயம்), (மட். புனித சிசிலியா மகளிர் கல்லூரி),

*குழு - 2*

(கல். அஸ் - ஸிறாஜ் மகா வித்தியாலயம்), (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி), (யா.சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

## நடனம் (தனி)

*முதலாம் பிரிவு*

வ.ஸ்ரீதரா (யா.யாழ் இந்து மகளிர் கல்லூரி), த.டிலக்ஷி (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி), வஜ்ரா முத்துக்குமார் (மட். புனித சிசிலியா மகளிர் கல்லூரி) ஆரணி (யா.உடுவில் மகளிர் கல்லூரி),

*இரண்டாம் பிரிவு*

ப.மதுமதி (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி), சோபனா சிறி சூரியகாந்தன் (மட். வின்சன் மகளிர் கல்லூரி),

*மூன்றாம் பிரிவு*

கோவர்த்தினி கருணாநிதி (மட். புனித சிசிலியா மகளிர் கல்லூரி), சி.கோபிகா (வ.தமிழ் ம.ம.வித்தியாலயம்), சி.பவித்திரா (யா.திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலயம்),

*நான்காம் பிரிவு*

கருணாநிதி தனஞ்செயன் (மட். புனித மைக்கேல் கல்லூரி), சி.ஷமிலா (யா.இராமநாதன் கல்லூரி),சி.அபிராமி (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி),

*ஐந்தாம் பிரிவு*

பு.அமிர்தினி (தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி), வி.ஜீவிகா (யா.யூனியன் கல்லூரி), சி.நிவேதிகா (வ.தமிழ் ம.ம.வித்தியாலயம்),

## நடனம் (குழு)

*குழு 1*

மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, யா.யாழ்.மத்திய கல்லூரி, தி.ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி,

## நாட்டிய நாடகம்

*குழு 2*

யா. வேம்படி மகளிர் கல்லூரி, மன். சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, வ.சைவப்பிரகாச ம.ம.வித்தியாலயம்

## நாடகம்

*திறந்த போட்டி*

கிளிநொச்சி மகாவித்தியாலயம், மு.புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம், மன்.சென்லோறன்ஸ் றோ.க.த.க.பாடசாலை

## வில்லுப்பாட்டு

*திறந்த போட்டி*

யா.யாழ்ப்பாணக்கல்லூரி, தி.இ.கி.ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, மு.முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க. பாடசாலை

## விவாதம்

*திறந்த போட்டி*

யா.மத்தியகல்லூரி, மு.புதுக்குடியிருப்பு ம.வித்தியாலயம், க.மு.அக்கரைப்பற்று மு.ம.வித்தியாலயம்.

## தமிழறிவு வினாவிடை

*திறந்த போட்டி*

தி.இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, மு.முல்லைத்தீவு ம.வித்தியாலயம், யா.விக்னேஸ்வராக் கல்லூரி.

## முஸ்லிம் நிகழ்ச்சி

*குழு 1*

மட்.காத்தான்குடி ம.ம.வித்தியாலயம், வ.முஸ்லிம் ம.வித்தியாலயம், தி.அல்–அக்ஷா ம.வித்தியாலயம்

## சிங்கள மாணவர்களுக்கான தமிழ் வாசிப்பு

*விசேட பிரிவு 1*

எச்.டபிள்யூ. இந்தியா உததாரி (தி.திஸ்ஸ் ம.வித்தியாலயம்), ச.சமோன் சாமன் றணசிங்க (வ.காமினி ம:வித்தியாலயம்),

*விசேட பிரிவு 2*

தே.மெ.சந்திமா பிரியதர்சினி (வ.காமினி ம.வித்தியாலயம்), ரி.மேரி வெஸ்டா (தி.இராஜகிரிய வித்தியாலோக மகா வித்தியாலயம்)

## சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்துப் போட்டி

*விசேட பிரிவு 1*

எம்.பெரும்துலாஜ் (தி.திஸ்ஸ மகா வித்தியாலயம்), சதுரிமா ஹர்சனி விக்கிரமசிங்க (வவு.அக்ரபோதி மகா வித்தியாலயம்).

*பிரிவு 2*

எஸ்.நிஷானி செவ்வந்தி (தி.திஸ்ஸ மகா வித்தியாலயம்,) அனுஷா பிரியங்கனி (வவு.பரக்கும் ம.வித்தியாலயம்.) (03)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# இணுவில் சம்பவம் குறித்து விசேட பொலிஸ் குழு விசாரணை

யாழ்ப்பாணம் —

இணுவிலில் கொல்லப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக - யாழ்ப்பாணம் வந்துள்ள இரகசிய பொலிஸார் இதுவரை சுமார் 15 பேரிடம் விசாரணைகளை மேற்கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இணுவில் பிரதேசத்தில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையை அடுத்து- நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக மக்கள் இருந்த பகுதிக்குச் சென்ற பொலிஸ் அத்தியட்சகர், மக்கள் கூட்டத்திற்குச் சென்றதும் காணாமல் போய்விட்டார் என்று சம்பவத்தை நேரில் கண்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மக்கள் கூட்டத்திற்குள் சிக்கிக்கொண்டதால் பொலிஸாரால் அவரைக் காப்பாற்ற முடியாமல் போனது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாள்ஸ் விஜேவர்த்தனவின் கொலைக்கும், ஏனைய கொலைகளுக்கும் இடையே பெரும் வித்தியாசம் உள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக பொலிஸார் உறங்கிக்கொண்டிருக்கப்போவதில்லை என பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தனவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக குருணாகலையிலுள்ள அவரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றபோதே பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

## ஜே.வி.பி அலுவலகம் தாக்கப்பட்டதற்கு எதிராக கந்தளாயில் ஆர்ப்பாட்டம்!



திருகோணமலை

திருகோணமலை மாவட்ட ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகரவின் அலுவலகத்தின்மீது நேற்றுமுன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கந்தளாயில் நேற்று எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

பொட்டன் கட்டுவ சந்தியில் இருந்து நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆரம்பித்த பேரணியில், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜயந்தவிஜேசேகரா, எஸ்.கே. சுபசிங்க, ரணவீரபத்திரன, நாமல் குணரட்ண மற்றும் ஜே.வி.பியின் வடமத்திய, வடமேல் மாகாண சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

கந்தளாய் மணிக்கூட்டு வீதி சந்தியில் நடத்தப்பட்ட பேரணியில் 5 ஆயிரம் பேர்வரை பங்கேற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேரணி முடிவில் மன்னம்பிட்டிய பாஹியவே தேவசித்தாலங்கார தேரர், பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கே. அபயசிங்க ஆகியோர் உரைநிகழ்த்தினர். இந்த பேரணியை முன்னிட்டு கந்தளாயில் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு பலத்து பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. (10,4)

## போராளி, நாட்டுப்பற்றாளர் சாவு

கிளிநொச்சி —

சுகயீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் இராசநாயகியம்மா - (பரிமளராசா இராசநாயகி) கேவில் முள்ளியான், வடமராட்சி கிழக்கு என்ற முகவரியைச் சேர்ந்தவர் நேற்று முன்தினம் சாவடைந்தார்.

கடந்தமாதம் 31 ஆம்திகதி தவறுதலான வெடிவிபத்தின்போது வீரவேங்கை பவளக்குறிஞ்சி (கருணாநிதி - நவேந்தினி) 3 ஆம் வட்டாரம் குயிருப்புமுனை அன்னாமலை மண்டூர் மட்டக்களப்பு என்னும் முகவரியைச் சேர்ந்த போராளியே சாவடைந்தவராவார். இவர்கள் இருவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### சாந்தரூபனுக்கு...

எனினும், அரசாங்கத் திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் திறந்திருந்தபோதும் மக்கள் வரவு குறைவாகவே காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மேற்படி சம்பவத்தை கண்டித்தும், அஞ்சலி செலுத்தும் வகையிலும் துக்கதினம் அனுஷ்டிக்குமாறு அங்குள்ள பொதுஅமைப்புகளும், சிகை ஒப்பனை அலங்கரிப்பாளர் சங்கத்தினரும் அழைப்பு விடுத்திருந்தனர்.

எனினும் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டதுடன் சில வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

இதேவேளை யாழ்ப்பாணத்திலும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

### மேர்வின்...

நேற்றுப் பிற்பகல் 3 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி பிரதமர் வாசஸ்தலமான அலரிமாளிகைக்குச் சென்று, பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவைப் பதவியிலிருந்து நீக்குமாறு கோரும் மகஜரை பிரதமரிடம் கையளித்தனர். இதன்பின்னர் கண்டனக் கூட்டமும் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, புதிய ஜனநாயகக் கட்சி, மேல்மாகாண மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட பல்வேறு அரசியல் கட்சிகளும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், இ.தொ.க.தலைவர் ஆறுமுகன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்லச்சாமி, புத்திரசிகாமணி, மனோகணேசன், ந.ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் தி.மகேஸ்வரன் ஆகியோர் உட்பட பல்வேறு கட்சிகளின் பிரமுகர்களும் கலந்துகொண்டனர். அத்துடன், மலையகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த பெருமளவு தோட்டத் தொழிலாளர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

### மோட்டார்...

சைக்கிளில் தனியார் கல்விநிறுவனம் ஒன்றுக்கு கல்விகற்கச் சென்றுவிட்டு, வீடு திரும்பிக்கொண் டிருந்தபோது - மாணவி பயணம் செய்த மோட் டார் சைக்கிளும் கன்டர் வாகனமும் மோதி விபத் துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் மாணவி அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக பொதுமக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கிய போதும் இரண்டு மணி நேரத்துக்குப் பின்னரே சம்பவ இடத்துக்குப் பொலிஸார் வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். அந்த இடத்துக்கு வருகை தந்த யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா விசாரணைகளை மேற்கொண்டார்.

இதேவேளை - உயிரிழந்த மாணவியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கன்ரர் வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதி, அந்த இடத்திலிருந்து தப்பிச்சென்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கடற்படையினரின் டிரக்டர் ஹையேஸுடன் மோதியது

### புங்குடுதீவில் சம்பவம்

யாழ்ப்பாணம் —

புங்குடுதீவுப் பகுதியில் ஹையேஸ் வாகனமும் கடற்படையினரின் உழவு இயந்திரமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஹையேஸ் வாகனத்தில் சென்ற பொதுமக்கள் சிலரும் இரண்டு கடற்படையினரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறிகட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹையேஸ் வானும் கடற்படையினரின் உழவு இயந்திரமும் புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமையக காரியாலயம் அமைந்திருந்த இடத்துக்கு முன்னால் நேற்றுக் காலை 9 மணியளவில் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் ஹையேஸ் வானில் பயணித்த சில பயணிகள் காயமடைந்ததுடன் கடற்படையைச் சேர்ந்த அபயசேன, அபயசிங்க ஆகிய இருவரும் காயமடைந்து காரைநகர் கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்துக்குள்ளான ஹையேஸ் வாகனத்தையும் உழவு இயந்திரத்தையும் ஊர்காவற்துறை பொலிஸார் தடுத்துவைத்துள்ளனர்.

### நல்லைக்...

5.30 மணிக்கு கார்த்திகை உற்சவமும், 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சந்தான கோபாலர் உற்சவமும், அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு கைலாச வாகன உற்சவமும் நடைபெறும்.

30 ஆம் திகதி காலை 7 மணிக்கு கஜவல்லி, மகாவல்லி உற்சவமும், தொடர்ந்து வேல்விமான உற்சவமும் இடம்பெறவுள்ளன. மறுநாள் தொண்டாயுதபாணி உற்சவமும் இடம்பெறவுள்ளது.

முதலாம் திகதி மாலை 6.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் காலை 7 மணிக்கு தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் 3ஆம் திகதி காலை 7 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும். உற்சவ காலத்தில் அடியார்கள் ஆலயத்துக்குச் சென்று திரும்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக உற்சவகாலப் பணிமனை அறிவித்துள்ளது. (100,111)

## இரத்மலானை ரயில் விபத்து; 29 பயணிகள் படுகாயம்!

கொழும்பு —

கொழும்பிலிருந்து அளுத்கமை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலும் இரத்மலானையில் பழுதடைந்த ரயில் பெட்டிகளை ஏற்றிச்சென்ற ரயிலும் மோதியதில் 27 பேர் காயமடைந்தனர். நேற்று நண்பகல் 12.05 மணியளவில் இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பழுதடைந்த ரயில் பெட்டிகள் திருத்த வேலைகளுக்காக இரத்மலானையில் உள்ள ரயில்வே தொழிற்சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட வேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பழுதடைந்த பெட்டிகளை இழுத்துச்சென்ற ரயிலின் பெட்டிகள் கழன்று பின்புறமாக வந்து அளுத்கமை நோக்கிச் சென்ற ரயிலின் இயந்திர



பாகத்துடன் மோதியது. இதன்போது சாரதிகளில் ஒருவர் ரயிலிலிருந்து வெளியே பாய்ந்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 29 பேரில் 27 பேர் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ரயில் சாரதியும் மற்றுமொருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அரசின் நிழல்...

அம்மையார் ஆகியோர் நேற்றுக் காலை அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோரை லண்டனிலுள்ள வதிவிடத்தில் சந்தித்து இலங்கை அரசியல் நிலவரம் குறித்து கலந்துரையாடியபோதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இரண்டு மணி நேரம்வரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் முக்கியமாக போர்நிறுத்த உடன்பாட்டை நிலைப்படுத்திப் பலப்படுத்தும் சாத்தியக்கூறுகள் குறித்துப் பேசப்பட்டது.

போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளையும், கடப்பாடுகளையும் இலங்கை அரசு செம்மையாகக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் - ஒரு நம்பிக்கையூட்டும் நல்லெண்ண நடவடிக்கையாக தமிழ்த்துணைப் படைகளின் ஆயுதங்கள் களையப்படுவது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் போராளிகள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்குவதற்கான சரியான புறநிலையை அமைத்துக் கொடுப்பது அரசின் கடப்பாடு எனவும் - போர்நிறுத்தம் சரிவரப் பேணப்படுவதற்கு இது முக்கியம் எனவும் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக் காரணமாக பொதுக்கட்டமைப்பு முடக்கம் கண்டுள்ள நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நேரடியாக உதவி வழங்குவது சர்வதேச சமூகத்தின் தார்மீக பொறுப்பு என்றும் -

நோர்வே அரசிடம் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்திக் கூறினார்.

### புலமைப்பரிசில்...

9 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் அதிபர் சிவலிங்கம் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் - தமிழீழத் தேசியக் கொடியை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஏற்றி வைத்தார்.

மங்கள விளக்கை முல்லைத்தீவு வலயக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் சிவராசா, குமரகுரு புடவை அழகு பொருள் வாணிப நிலையத்தின் உரிமையாளர் ஆனந்தன், ஆசிரியர் அன்பழகன் ஆகியோர் ஏற்றினர்.

வலயக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் சிவராசா, ஆசிரியர் அன்பழகன், குமரகுரு புடவை வாணிப நிலையத்தின் உரிமையாளர் ஆனந்தன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். மாணவர்களுக்கான கருத்தரங்கை பிரபல ஆசிரியர் அன்பழகன் நடத்தினார்.

மாலை 3 மணிவரை இடம்பெற்ற இந்த முன்னோடிக் கருத்தரங்கில் ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இதேவேளை ஏற்கனவே யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் திரு.தருமராசா சிவானந்தம்**

(ஆங்கில ஆசிரியரும், கௌரவ நூலகரும்) இடைக்காடு.

இடைக்காடு - அச்சுவேலியைச் சேர்ந்த திரு.தருமராசா சிவானந்தம் அவர்கள் (ஆங்கில ஆசிரியரும், கௌரவ நூலகரும்) மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்பட்டவேளை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இடைக்காடு வாழ் மக்கள்
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(2008)

## மரண அறிவித்தல்

### தருமராசா சிவானந்தம்



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா சிவானந்தம் (ஆங்கில ஆசிரியர்) அவர்கள் 08.08.2005 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் தருமராசா - ஜீவபாஸ்கரி தம்பதிகளின் மகனும், வஜிதா (ஜேர்மனி), சிவரூபன் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமானந்தம் (ஜேர்மனி), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சஞ்சயின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

ஞானியார் வளவு,
இடைக்காடு.

தகவல்
குடும்பத்தினர்.

ஓகஸ்ட் 15 வரைஎன்றும் இல்லா வகையில்
அசத்தலான தள்ளுபடி 25 % வரை
இன்றே விரையுங்கள்...
ஓசானிக் இம்பெக்ஸ்
192, பிரதான வீதி, கொழும்பு -11.
T.P-011-2336720, 011-23272168

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.